காவிய மஞ்சரி

பன்மொழிப் புலவர்
மு. கு. ஜகந்நாத ராஜா

விசுவசாந்தி பதிப்பகம்
இராஜபாளையம்

காவிய மஞ்சரி

* பிரிவு
* நிலா முற்றம்
* மைதாஸ்

பன்மொழிப்புலவர் மு. கு. ஜகந்நாத ராஜா

வெளியீடு

விசுவ சாந்தி பதிப்பகம்

இராஜபாளையம்

1986

KAAVIYAMANJARI (POEMS)

FIRST EDITION
1986 July
Copies 1000

Author
M. G. JAGANNATHA RAJA
Rajapalayam

Publishers
VISWA SANTHI PATHIPPAGAM
22, Angiah Raja Street
RAJAPALAYAM - 626 117

Printers
LEO PRINTERS
Rajapalayam

முன்னுரை

தனி மனித விருப்பத்துக்கும் சமுதாய அறக் கோட்பாடுகட்கும் எப்போதுமே முரண்பாடுகள் தோன்றுவது இயல்பு. சமுதாயப் பொறுப்புணர்ச்சி மிக்க மனிதன் சமுதாய நீதிநெறிகட்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்கிருன். எனினும் அவனது அடிமனத்தில் அமிழ்ந்து கிடக்கும் ஆசைகளே கனவுகளாகவும், கற்பனைகளாகவும் வெளிப்படுகின்றன.

அவ்வுணர்ச்சிகட்கும் கற்பனைகட்கும் பண்பட்ட ஓருருவம் தந்து, அழகியல் வேட்கையும் அனுபவ வெளிப்பாடும் கூடிய கலையாக்குவதில் சிறந்த கலைஞன் வெற்றி பெறுகிருன்.

கலைகளிற் சிறந்ததான கவிதைக் கலையிலும் தற்காலச் சூழ்நிலைக்கேற்ப உன்னதமான பல படைப்புகள் உருவாகின்றன. எனினும் மரபு நெறிப்பட்ட இசைநயஞ் சார்ந்த செய்யுள் நடையைவிட உரைநடையே மிகுதியாகப் பயிலப்பட்டு வருகிறது.

உலக மொழிகளில் பழமைச் சிறப்புடைய இலக்கிய வளத்தோடு இசைவளமும் உடைய தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மும்மொழிகளின் செய்யுள் அமைப்புகள் எந்தக் கருத்தையும் வெளியிடற்கேற்ற வகையில் அமைந்துள்ளன. அந்தச் செய்யுள் அமைப்புகளின் அழகினை நாம் புறக்கணித்தல் கூடாது.

கருத்திற்கேற்ப கவிஞன் தன் படைப்புகளை வெளியிட வசனமோ, உரைநடையோ, கவிதையையோ, கதையையோ, நாடகமோ தேர்ந்துகொள்ளல் இயல்பு. வசனம் உயர்வு என்றோ, செய்யுள்தான் உயர்வு என்றோ கூறல் தவறுதான். கருத்தின் உயர்வுதான் படைப்பின் உயர்வேயன்றி, அதன் உருவ அமைப்பைப் பொறுத்து அமைவதன்று.

இந்த 'காவிய மஞ்சரி' எனும் நூலில் மரபு வழிப்பட்ட செய்யுள் நடையிலும், சில புதிய உத்திகளைக் கையாண்டுள்ளேன்.

'பிரிவு' எனும் தலைப்பில் புதிய இசை வடிவத்தில் முதல் கடை எதுகைகளுடன், முதலிரு சீரும், பின்னர் முச்சீரும் உடைய நான்கடிப் பாடல்கள் அமைந்துள்ளன.

மெய்ப்பாடுகளில் தலைமையானது உவகைச் சுவையாகிய சிருங்காரம் என்பது போஜனின் மதம். கருணைதான் என்பது பவபூதியின் கருத்து இவ்விரண்டுமே இணைந்த பிரிவினைப்பற்றிய காதற்பாடல்களே (விப்பிரலம்ப சிருங்காரமே) உயர்ந்த கவிச்சுவையுடையவை என்பது வடமொழித் திறனாய்வாளர்களான சஹிருதயர்களின் முடிவு. உடலுறவு இல்லாமல் உள்ளத்தால் மட்டும் உறவு கொள்ளும் காதலை (Platonic Love) பிளாடோனிக் லவ் என்பர். இத்தகு காதலில் பிரிவுதான் பிரதானமான அம்சமாகும்.

சங்கப்பாடலில் பிரிவினைப்பற்றிய பாடல்களே அதிகம். உருது கவிஞர்களின் கஜலில் பிரிவுதான் மிகுதியாக அமைகின்றது. இக்காதற்பிரிவுக் கவிதைகளை இறைவனைத் தேடி மயங்கும் ஆன்மாவின் இதயத் துடிப்புகளாக குறியீட்டு முறையில் பொருள்படுத்துவர்

இப் 'பிரிவு' கவிதைகள், இன்றைய நாகரிக சமுதாயச் சூழ்நிலையில் சுதந்திரத்தை இழந்து தவிக்கும் தனி மனிதனின் இதயத் துடிப்பாகவும் பொருட்படுத்தலாம்.

மனிதனின் யாந்திரிகமான, மிருக இச்சையுடன் கூடிய வாழ்வில் மனநிறைவுறுவதில்லை. எட்டாத தொலை தூரத்திலுள்ள விண்மீன்களுடன் உறவாட விரும்புகிறுன் பசிக்கும் பிணிக்கும் அறியாமைக்கும் எதிரான போராட்டத்தில் கூட அன்பு மலர்களையும், ஆசைகனவுகளின் மின்னல் ஒளிவீச்சினையும் காணத் துடிக்கிறான்.

பிரிவிலும் இன்பம் உண்டு. பகலும் இருளும், ஒன்றை ஒன்று பிரிந்து இருந்தாலும் உலக இயக்கம் நடைபெற துணைபுரிகிறது. தீ பிரிவினைத் தூண்டும் நீர் இணைப்பினை வேண்டும். தீயும்நீரும் இன்றிப் பொருள்கள் உருவாக இயலாது அதுபோல வாழ்வியலிலும் புணர்வும் பிரிவும் இன்றியமையாத இணைகோடுகளேயாகும்.

இந்தியப் பண்பாட்டின் ஜீவ நாடியாகத் திகழும் கற்புத் தத்துவத்திற்கு ஒருதனி மகத்துவம் உண்டு. புனிதமான கற்புத் தத்துவத்துக்குட்பட்டும், இன்றைய சமுதாயப் புதுக்கருத்துக்கட்கிணங்கியும் அமைந்த உணர்வுகளையே இப் 'பிரிவு' வெளிப்படுத்துகிறது.

காவிய மஞ்சரியின் அடுத்த கவிமலர்கள் ஆகிய 'நிலா முற்றம்' இன்றைய சமுதாயத்தைப் பற்றிய பல்வேறு கருத்துக்களின் வெளிப்பாடாகும். மனிதன், விஞ்ஞான நாகரிகத்தால், அணுயுகத்தின் முன்னேற்றத்தால் பல வசதிகளை அனுபவித்தாலும் மன நிறைவையோ, தூய மகிழ்ச்சியையோ அனுபவிக்க முடிவதில்லை. அமைதியை இழந்து, இயற்கை தரும் இன்பங்களையும் துய்க்க நேரமின்றி குறிக்கோளின்றி ஓடுகிறான்.

இயற்கை இன்பங்களின் குறியீடே நிலவு அதனைத் துய்க்க நேரமில்லாத மனிதர்கள், கட்டிடங்கட்குள் அடைபட்டு, மனஅமைதியில்லா துழன்றும் அவர்களின் அடிமனத் துடிப்புகள் இயற்கையின்பத்தை நாடியே ஓடுகிறது. அவ்வுணர்வினை வெளிப்படுத்துவதோடு இக்காலத்துக்குகந்த பல தத்துவக் கருத்துக்களையும் கொண்டுள்ளதாக நிலா முற்றம் அமைந்துள்ளது.

பிரசித்தமான கிரேக்கக் கதையாகிய மைதாஸின் தொட்டதெல்லாம் பொன்னாக்கிய கதை மூலம் இன்றைய சமுதாயத்தின் பணவெறியை உருவகித்துள்ளேன். பண வெறி கொண்டு, பண்புகளை இழந்து, இயல்பான இன்பங்களையும் இழந்துவிட்ட தற்கால மனிதனின் குறியீடே ''மைதாஸ்'' காவிய மஞ்சரியில் உள்ள இம் மூன்று கவிதைக் கதைகளும் மனிதகுல சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய லட்சியங்களை நாடும் மனிதனின் இதயவேட்கைகளே ஆகும்.

மு. கு. ஜகந்நாத ராஜா

சமர்ப்பணம்

என்பால்

அன்புடைய இதயங்கட்கு

பிரிவு

1

காதல் தீயில் - நான்
வேதல் ஓய
கண்ணீர் வெள்ளம் பொழிகின்றேன் - துயர்ப்
புண்ணாய் உள்ளம் அழிகின்றேன்.

2

பூக்குள் போகும் - தேன்
ஈக்கள் ஆகித்
தேடித் தேடித் திரிகின்றேன் - உளம்
வாடி வாடிக் கரிகின்றேன்.

3

மின்னின் கயிற்றில் - பசும்
பொன்னின் வயிற்றில்
உன்னைத் தேடிப் பார்க்கின்றேன் - களைத்(து)
என்னை இழந்து வேர்க்கின்றேன்.

4

முகிலில் தேடி - உளம்
திகிலுற் றோடி
வானம் முழுதும் அலைகின்றேன் - குயிற்
கானம் ஆகிக் கலைகின்றேன்.

5

பிறையில் ஏறி - மனச்
சிறையைக் கீறி
அங்குன் சுவடு காண்கின்றேன் - உளத்
தெங்கும் இனிமை பூண்கின்றேன்.

6

விண்ணின் மலர்கள் - என்
எண்ணத் தளிர்கள்
கொய்து கையுறை கொணர்ந்திடுவேன் - உயிர்
பெய்து நினைவிற் புணர்ந்திடுவேன்.

7

அடிவா னத்தின் - எழிற்
பிடிமா னத்தில்
உன்னெழிற் சித்திரம் தீட்டுகிறேன் - அதன்
கன்னத்தில் முத்தநீ ராட்டுகிறேன்.

8

கள்ளவிழ் பூக்களில் - என்
உள்ளமே ஈக்களாய்
உன்னெழிற் தேனையே பருகுகிறேன் - அன்பே!
உன்னையே எண்ணியே உருகுகிறேன்.

9

பூங்குயில் கீதத்தில் - மறை
தாங்கிய வேதத்தில்
நினதிசைச் சொல்மது வழிகிறதே - என்
மனதிதைப் பருகுமுன் கழிகிறதே.

10

தென்றல் காற்றே - மது
மன்ற லூற்றே
என்றன் காதல் கொடியெங்கே? - கடி
கின்ற வேதனைக்கு விடிவெங்கே?

11

பிரிவெனும் வாளே - இன்
றரியுமித் தாளே
இனிமலர் வாடிக் கருகாதா? - என்
இனிமையும் கூடி மருகாதா?

12

கானலின் மலர்கள் - முது
வேனிலிற் புலர
மணமது தேடல் வீணேயோ? - என்
குணமனம் வாடல் காணுயோ?

13

இளமதி நிலவின் - என்
வளமதில் உலவும்
கற்பகக் காமலர்க் காடே - என்
கற்பனை யாம்மன வீடே!

14

கனவினில் வந்து - தேன்
இனிமைகள் சிந்தி
எங்குநீ மறைந்து போனாயோ - துயர்
பொங்கிட இவ்வித மானாயோ?

15

நிழலென நீங்கா - நினை
அழலெனத் தாங்கி
உளம்சுட எத்துனை நாளேயோ - என்
வளம்கெடப் பித்தனுய் ஆளாவேன்!

16

கோடை வெயிலில் - மிக
வாடும் பயிராய்
மெலிந்திடும் என்னைப் பாராயோ? - மழையாய்
நலிந்திடல் நீக்க வாராயோ?

17

ஆடும் மயிலாய் - எனைக்
கூடக் குயிலாய்
நாடி வரவே மாட்டாயோ? - இன்பம்
பாடித் தரவே மாட்டாயா?

18

இன்ப அலையாய் - மாறு
அன்பு நிலையாய்
என்னருகமர மாட்டாயோ - நின்
கன்னம் சிறிதே காட்டாயோ?

19

இளமரக் காவில் - என்
உளமெனும் பூவில்
நிலவெனும் அமுதம் பெய்யாயோ - தீக்
கலவையின் பிரிவினில் உய்யேனோ?

20

மாம்பழ வண்டு - துயர்
வேம்பிணைக் கண்டு
விலகிடல் உண்டெனெ அறியாயோ? - நான்
அலகிடல் பண்டெனச் செறியாயோ?

21

இரவின் முடிவில் - நின்
பிரிவின் பிடியில்
உய்ந்திட இன்றும் விடியாதோ? - நான்
நைந்திடல் என்றும் முடியாதோ?

22

மின்னொளி வீச்சில் - நின்
இன்மதுப் பேச்சில்
என்னை இழந்ததும் தீதாமோ - துயர்
தன்னில் உழந்ததும் போதாதோ?

23

கார்மழை இரவில் - இப்
பார்மறை கரவில்
தேடி வந்தது மறந்தாயோ? - நினைவில்
வாடி நொந்திடப் பறந்தாயே?

24

பூம்புதர் மறைவில் - துயர்ச்
சாம்பலின் நிறைவில்
கூம்பிய மலர்தான் விரியாதோ - என்
தேம்பலுக் குலகம் சிரியாதோ?.

25

வேதனை தீர - நின்
போதனை மீறி
அருகணைந் திடநீ ஓடுவதேன் - மீண்டும்
பெருகுகண் ணீரில் கூடுவதேன்?

26

தோரண மாகி - எழிற்
பூரண மாகி,
கண்களில் நிறைந்தே ஆடுகின்றய் - மனப்
புண்களில் மறைந்தே வாடுகின்றேன்.

27

கன்னம் மின்ன - மன
அன்னம் என்ன
சிறகுகள் வீசிப் பறக்கின்ருய் - என்
உறவுகள் முறிய இறக்கின்றேன்.

28

அகல்விளக் கொளியை - அணைக்கப்
புகலேன் வளியே?
பிரிவெனும் இருளின் தனித்துயரில் - இடர்
புரிவதில் நீயே. தனித் துயர்வாய்:

29

சஞ்சல சித்தம் - விழைந்து
கெஞ்சிய முத்தம்
ஒன்றினை நீ தரக் கூடாதா? - என்
கன்றிய மனக்குயில் பாடாதா?

30

வளைகள் குலுங்க - மனத்
தளைகள் கலங்க
வருவாய் என்றே எதிர்பார்த்தேன் - மாய
உருவாய் நின்றே புதிர்போட்டாய்!

31

உன்னைக் காணவும் - நீ
என்னைக் காணவும்
மின்னல் பிறந்தது மறந்தாயா - இதழ்க்
கன்னல் கவிதையில் சிறந்தோயே!

32

எத்துணை அழகுடன் - என்
சித்தமே பழகினும்
பித்தினுட் பட்டுடல் சுட்டதுவே? - நினை
நத்திய மோகம் விட்டதுவா?

33

மலரடிச் சிலம்பு - மெல
உலவிடப் புலம்ப
வந்தனை என்றே மகிழ்ந்தேனே - பின்
சிந்தனை யழிந்துளம் நெகிழ்ந்தேனே.

34

வெண்புரு போல்வாய் - என்
முன்புரு தகல்வாய்,
பண்புரு தகல்வது நலமா? - என்
நண்பெலாம் உளத்தினில் இலதா?

35

கற்பனை கடந்த - எழிற்
சிற்பம துடைந்த
வேதனை தீர வழிஇலையோ? - என்
பாதையின் ஓரம் துயர் மலையோ?

36

எண்ணப் பேச்சுகள் - எழில்
வண்ணப் பூச்சிகள்
ஆகியென் மனவெளித் திரிந்திடுமே - பிடிக்க
வேகமாய் கரங்களும் விரிந்திடுமே.

37

சங்கம தாகம் - நின்
அங்க மோகம்
தணிய ஒருவழி காணேனோ? - உளம்
பணிய இசைவுற நாண்ஏனோ?

38

பட்டுச் சிறகால் - உளம்
தொட்டுப் பறந்த
சிட்டுக் குருவி! கூடெனும் - மனம்
விட்டுப் பிரிதல் கூடுமோ?

39

இனிக்கும் விருந்தே - துயர்
தணிக்கும் மருந்தே
பொன்னென மீண்டும் பொருந்தாயோ - மண்
என்னவே ஈண்டு வருந்துவதோ?

40

கட்டுடல் தொட்டிட - கை
பட்டுயிர் விட்டிட
ஆர்வ மோடே நெருங்கிடுவேன் - பின்
பார்வைக் கஞ்சி மருங்ககல்வேன்

41

அலரது பரவிட - உள
மலரிது கருகிட
வெயில்சுடு புழுவெனத துடிக்கின்றேன் - உலகு
பயில்தரு நெறிதனில் நடிக்கின்றேன்

42

மலைமுடிச் சிகரம் - நின்
நிலையினைப் பகர
மஞ்செனக் கெஞ்சியே வருகின்றேன் - நின்
தஞ்சம தின்றெனச் சரிகின்றேன்

43

அகில்மணப் புகையாய் - கரு
முகிலிள நகையாய்
மெல்ல மறைந்து போனாயே - என்
உள்ளம் நிறைந்திட லானாயே

44

புல்நுனிப் பனிபோல் - நகும்
பல்நிறக் கனியே!
கண்டினி துண்டிடல் உண்டாமோ? - மலர்
விண்டிட உறவுறும் வண்டேநான்!

45

கடலலைத் தோணி - கை
விடவுயிர் பேணிக்
காத்திடத் துரும்பையும் விட்டேனே - உலைத்
தீத்திரள் இரும்பெனச் சுட்டாயே!

46

மணல்வெளிக் குன்றில் - தின
மணிஒளி குன்ற
மாலையி லழைத்தேன் மயக்கமுற - அக்
காலையி லேன்நீ தயக்கமுற்ருய்,

47

ஒரேஒரு தடவை - இனி
வரேன்எனத் தொடவே
இசைந்தனை போன்றாய் விதிர்விதிர்த்தாய் - அமுது
கசந்திட லேனோ? புதிர்இதுவே!

48

எட்டிப் பிடிக்க - இதழ்
தொட்டுக் குடிக்க
பட்டுத் துகிலைப் பற்றிவிட்டேன் - எனை
விட்டு விலகென ஏற்றிவிட்டாய்!

49

மென்மலர்ச் சேக்கையில் - நின்
பொன்மலர் யாக்கையைத்
தழுவிக் கிடத்தலைத் துறந்தனையே - உளம்
நழுவிப் படர்ந்ததை மறந்தனையே.

50

வடவைக் கனலே - உளக்
கடலாம் புனலில்
தங்கிக் கிடக்குமே இன்றே - அது
பொங்கெரி மலையாவ தென்றோ?

51

பாற்கடல் கடைந்தே - அமுது
ஏற்கவே அடைந்தேன்.
நஞ்சது மட்டுமே கிடைத்ததே - இள
நெஞ்சினைச் சுட்டெரித் துடைத்ததே.

52

கானலின் நீரே - உள
மானிது பாரே!
எத்துணை விலகிச்சென் றாலுமே - இது
பித்துடன் தொடருமெக் காலுமே.

53

பிரிவெனும் தீயே - சிறிதும்
பரிவிலா தோயே!
சுடரும் கடலிற் குளிக்குமே - என்
இடராம் சுடலெங் கொளிப்பதோ?

54

தேயும் நிலவுமே - பின்
மாயா துலவுமே
ஆயின் யானோ தேய்கின்றேன் - மரணப்
பேயின் கையால் மாய்கின்றேன்

55

கடிமுகை மலருமோ? - ஒளி
விடியலே புலருமோ?
துன்பமே எனைவிட்டு நீங்காயோ? - என்
இன்பமே வரவேண்டி ஏங்குவனே'

56

விரக நஞ்சு - பெய்து
தருக கொஞ்சம் !
கழுத்தி லடக்கிச் சிவன்போல்வேன் - என்
எழுத்தி லடக்கும் சிவைபோல்வோய்!

57

நாணங் கலந்திடு - நகை
நாணல் மலரிது
பிரிவுப் புயலினிற்சிதறியதே - நின்
உருவ மிழந்துளம் பதறியதே.

58

கனியித ழோரம் - விரி
இனிமையி னீரம்
உலர்நெஞ் சகத்தை நணைக்காதோ? - இனி
மலர்மஞ் சத்தில் பிணைக்காதோ?

59

கடைக்கண் தோய - எழில்
மடைக்கண் பாய
அமுதக் கடலில் திளைக்கேனோ? - வண்டாய்க்
குமுத மலரிணைத் துளைக்கேனோ?.

60

உடலிணைக் கிள்ள - துயர்க்
கடலலை துள்ள
பிரிவெனும் புயலே வருகின்றாய் - உளத்
திரிஎரி யவித்தே பொருகின்றாய்!

61

இதயமே வெந்து - உருகி
உதயமாம் சிந்து
கண்ணீர் வெள்ளமாய் ஓடுதே - அருவித்
தண்ணீர் இசையாய்ப் பாடுதே.

62

காதலிற் தோற்று - பெரும்
வேதனை ஏற்று
வாழ்வு முழுவதும் கழிவதுவோ - என்
தாழ்வு கண்டுளம் அழிவதுவோ?

63

கருங்குழற் பெயரில் - நின்
மருங்குலா வியலும்
வண்டுகள் நெஞ்சகம் படியாதோ? - பூஞ்
செண்டுகள் மஞ்சமாய் முடியாதோ?

64

பொழில்மல ருழுத - தேன்
எழில்மன மெழுது
கவிதைக ளெல்லாம் உனக்கன்றோ? - அதில்
கவிதுயர் எல்லாம் எனக்கன்றோ?

65

பருந்தெனத் திரிந்து - விண்
பொருந்தியே சரிந்து
உடற்சிறு கூட்டினை அடைமனமே! - என்
படரெலாம் காட்டிடக் குடைந்தனையோ?

66

மூங்கிற் துளையில் - புகுந்
தேங்கும் வளியே!
துயர கீதம் பாடுவதேன்? - நீ
உயர நாளே வாடுவதேன்?

67

வண்டுகள் குடைந்த - பூஞ்
செண்டென உடைந்த
இதயமே! உன்துயர் தீராதா? - இனி
உதயமே என்றுமே வாராதா?

68

கடலே மையாய் - மன
மடலே நெய்த
என்னுயிர் கலந்த கவிதைகளே - நின்
இன்னெழில் பொதியக விதைகளோ?

69

புண்ணகந் துளைத்த - துயர்
விண்ணகம் முளைத்த
மேகக் குழுவெனத் தோன்றிடுமே - நான்
மோகக் கழுவினில் நான்றிடுவேன் !

70

மோக வேகம் - நின்
தாக மாக
பருக வருங்கால் அகல்கின்ருய் - உளம்
உருக நைவேன் ! புகலின்றே !

71

தூதென வந்த - முகில்
யாதுரை தந்த
ததனை நம்பி யிருக்கின்றேன் - மன்
மதனை வெம்பிக் கரிக்கின்றேன்!

72

உலகெலாம் தந்து - விண்
நிலவது சிந்து
மமுதினைப் பருகேல் என்றிடினும் - இக்
குமுதமே பருகா நின்றிடுமோ?

73

காதலுக் காக - இறை
போதனை சாக
சுவர்க்க மிழந்த ஆதாமே - என்
சுவர்க்கம் இழைத்த வேதாவாம்!

74

நாடித் துடிப்பில் - பதம்
ஓடி நடிக்கும்
எழில்நடத் தரசி நீயன்றோ? - இதயப்
பொழில்நடந் திடவரு வாயன்றோ?

75

நினைவுகள் ஓர்ந்து - கவிப்
புனைவுகள் தேர்ந்து
காவியம் செய்திட முனைகின்றேன் - உயிர்
ஓவிய மாய்நினை வனைகின்றேன்.

76

மின்னலைப் பிடித்து - மலர்ச்
சுண்ணமே யிடித்து
வானவிற் குழைத்து நிலவுறையும் - ஒளித்
தேனினிற் பிசைந்து நினைவரைவேன்!

77

கண்ணின்நீர் பொழிந்து - என்
எண்ணமே அழிந்தும்
ஓவியம் மாசுறு தடக்குகிறேன் - என்
தேவியைத் தீண்டுரு தொடுக்குகிறேன்

78

மலைமுக டோடி - பேர்
அலைகடல் தேடி
எங்குமே காணு தயர்கின்றேன் - துயர்க்
கங்குலில் யானே உயர்கின்றேன்

79

பனிமுடி இமயம் - என்
தனிநிலை இதயம்
பிரிவெனும் வெஞ்சுடர் சுடஉருகும் - கண்ணில்
அரியதோர் கங்கைநீர் மிகைபெருகும்!

80

மறந்து விடவோ - இல்லை
இறந்து படவா?
இரண்டும் இயலா திருக்கின்றேன் - என்
வரண்ட வாழ்விற் சிரிக்கின்றேன்.

81

படர்மென் கொடிபோல் - மெலத்
தொடர்ந்துன் அடிமேல்
பற்றும் பாசக் கொடியிதுவே - நீர்
அற்றும் தளிர்க்கும்! முடிவெதுவோ?

82

இலையுதிர் காலத் - திருள்
புலருமோ ஞாலம்!
வசந்த மலர்கள் விரிந்திடுமோ? - என்
பசிந்த மேனி திரிந்திடுமோ?

83

பெண்ணெழிற் கன்னல் - ஒளிர்
விண் மிளிர் மின்னல்!
கண்விருந் தாகிப்பின் மறைந்ததுவே - மனப்
புண்மருந் தாகிமீண் டுறைந்திடுமோ?

84

உறுமும் பெயல்கள் - குமுற
லுறுமப் புயல்கள்
உனது புலவிக் குறிகாட்டும் - என்
மனதில் தாப வெறிமூட்டும்

85

ஆயிரம் விளக்கு - விண்
மேயினும் கிழக்கில்
ஞாயிறு வாரா விடினென்னும் - பிரிவுப்
பேயிருள் சூழின் விடிவென்னும்

86

நீயருகணைந்து - மலர்ப்
பாயலிற் பிணைந்து
மண்மறந் தாற்போற் கனவுற்றேன் - பின்
கண்திறந் திடினும் நனவற்றேன்.

87

அழகினைக் கண்டால் - நெருங்கிப்
பழகிட லுண்டேல்
யாரே பாச வலைப்படாரே? - காதல்த்
தேரினில் ஏறத் தலைப்படாரே?

88

உனது பிரிவால் - உடைந்த
மனதின் விரிவை
ஒட்ட வைக்கும்ஓர் மருந்துளதோ - இப்
பட்ட மரமும்பூச் சொரிந்திடுமோ?

89

பாலைப் பெருவழியில் - துயர்
மேலும் தரு நெறியில்
கானல் நீரும் இலதந்தோ! - மலர்த்
தேனின் விருந்துக் கலமந்தேன்!

90

தீக்கங் குகளில் - பனிப்
பூக்கள் உகவே
தீய்ந்தது போலவே ஆனேனே - மனம்
வேய்ந்தபூப் பந்தரைக் காணேனே!

91

தேடிய விழிகள் - மிக
வாடிடப் பழிகள்
மிருந்துல கென்னைச் சிரித்திடுமே - அலர்
புகுந்துல வுயிரைப் பறித்திடுமே.

92

தாகமாம் அகமே - இனிச்
சோகமே சுகமாம்!
இருளையே நேசித்திருந்துவிடு - அவள்
அருளையே மறந்து திருந்திவிடு.

93

மாயு முடலை - நான்
தோயக் கெடுவ
தென்னே என்றேன்? தயங்கிநின்ருய், - நான்
பின்னல் நின்றே மயங்கிநின்றேன்.

94

எழில்மது பருகி - நாள்
கழிவதோ உருகி?
இதயமோ டிதயம் இணையாதா? - பிரிவால்
வதைபடச் செய்திடும் கணையாதோ?

95

புண்படும் இதயம் - என்
பண்படா ததிரும்?
பண்புக ளெல்லாம் பாழ்படுமோ - நின்பால்
நண்பெனும் கொடிய வாள்படினே.

96

கோடிய புருவம் - கண்டு
வாடிய உருவம்
தளிர்த்திட முல்லை மலராதா? - இனிக்
களித்திட லில்லை எனிற்தீதாம்!

97

என்னலம் நினைந்து - நின்
தன்னலம் களைந்து
மன வீணையை மீட்டாயா? - என்பால்
நின தாணைகள் காட்டாயா?

98

கோடி பெறினும் - நினைக்
கூட லுறினே
வாழ்விற் கொருபொருள் வாய்த்திடுமே-இன்றேல்
தாழ்வுறப் பிரிவெனைத் தீய்த்திடுமே!

99

அன்பமு தின்றிப் - பிரிவில்
துன்புறல் நன்றோ?
இதழ்க ளுதிர்ந்து போனதுவே - இனிப்
புதிதாய்ச் சுரக்குமோ தேனதுவே!

100

தாமரை இல்லில் - திரி
காமரு வல்லின்
கருநிறக் குழல்எனும் வண்டுகள்தாமே - என்
பிரிவின தழல்புகை மண்டியதாமே!

101

இருட்கா தலியைத் - தேடி
மருட்கையி னலையும்
செஞ்சுடர் போலத் திரிகின்றேன் - நீ
மிஞ்சிய கொடுமை புரிகின்றாய்!

102

அருளிலா நெஞ்சம் - எனும்
இருளுறும் பஞ்சை
பிரிவெனும் தீச்சுடர் சுட்டெரிக்காதா? - நின்
பரிவெனும் தேன்மழை பட்டுருக்காதா?

103

காற்றும் கனலும் - முகில்
ஊற்றும் புனலும்
விண்ணும் மண்ணும் எங்கெங்கும் - நினை
எண்ணும் உவமையே பொங்கிடுமே

104

நினைந்து நினைந்து - கவிமலர்
புனைந்து புனைந்து
குளிரச் செய்தாய் நெஞ்சகமே - பின்சுட்
டொளிரச் செய்தாய் வஞ்சகமாய்!

105

மலர்நகை காட்டி - மனம்
உலர்ந்திட வாட்டி
வதைக்கும் எழிலே! வாடுமிள - நெஞ்சைப்
புதைக்கும் இடத்தைத் தேடுகிறேன்

106

மின்னின் புதுமை - சுடர்ப்
பொன்னின் பதுமை
என்னத் திகழும் எழில்மயிலே! - என்
சின்ன இதயப் பொழில் பயிலாய்!

107

மழைமுகில் விட்ட - வில்
தளையறு பட்ட
மின்னம் புகளோ? கண்வீச்சு!
மன்னும் அமுதோ நின்பேச்சு!

108

பிரிவினின் றுய்ய - அன்புப்
பரிவினை நெய்ய
அருகணைந் திடவே அழைக்கின்றேன் - மனம்
உருகிடின் நானும் பிழைக்கின்றேன்.

நிலா முற்றம்

நீல வானக் கடலிடையே
    நெருங்கி வந்த ஒளியமுதாம்
சீல மிக்க நெஞ்சுடையோர்
    சிந்தை போலக் குளிர்திங்கள்
கோல முடனே வெளிவரவும்
    கொள்ளை யின்பப் போதையிலே
ஞாலம் திளைத்து மகிழ்கின்ற
    நாட்டம் தன்னைக் காட்டுகிற்பாம் 1

உலாவந் ததுபோல் மென்மெலவே
    ஊர்ந்து வான நெடுந்தெருவில்
புலாவில் மீன்கள் கண்சிமிட்டிப்
    போகம் துய்க்கப் போதருமிந்
நிலாவின் எழிலைக் காண்பதற்காய்
    நீரில் எழுந்த அல்லிமலர்
குலாவும் காதற் போதையில்என்
    நெஞ்சும் கொஞ்ச முற்படுமே 2

நிலாமுற் றத்தில் அமர்ந்தபடி
    நிலத்தில் நிகழும் காட்சிகளை
பலாவின் சுளையில் தேன்பெய்த
    பாங்கிற் சுவைத்த படிநின்றே
எலாதிக் கினிலும் காண்கின்ற
    என்றன் மனத்துப் பதிவுகளை
அலாது வேறொன் றுரைக்கிலன்யான்
    அதனைக் கொஞ்சம் கேளீரோ 3

அண்ட வெளியில் எத்துணைதான்
அற்பு தங்கள் கிடந்தாலும்
மண்டிக் கிடக்கும் பேரழகின்
மாண்பிற் கிதனின் வேறுண்டோ?
சண்ட கிரணன் தழல்மாற்றிச்
சமுத்தி ரத்தின் உப்பொழித்தே
உண்ட நீரைத் தருமுகில்போல்
உதவும் ஒளியைச் சந்திரனே! 4

காயும் வெயில்பட் டுழன்றார்க்குக்
கனவின் சுகத்தைக் காட்டுதற்காய்
ஓயா திரவு முழுவதுமே
ஒளிவெள் ளத்தைக் கொட்டியதால்
தேயு மேனும், வருந்தாமல்
தினமும் உதவும் வள்ளலிது
மாயும் என்று வருந்துங்கால்
மனம்போல் வாழ்வாய் வளர்ந்திடுமே 5

விட்டில் வீழும் மாயுமென
விளக்கை அணைத்து வெளியினிலே
கட்டில் போட்டுத் தூங்காமல்
கண்கள் ஆரக் களித்திடவே
பட்டுத் துணியை விரித்தாற்போல்
பால் வெண்ணிலவு பரவுங்கால்
எட்டும் என்றன் கற்பனையாம்
எண்ணச் சிறகும் பறப்பதுவே 6

தூங்கிக் கிடக்கும் சுகத்தைவிடத்
தூங்கா துன்னைப் பார்க்கின்ற
பரங்கிற் கிடைக்கும் சுகமதுதான்
பல்லா யிரமாம் மடங்கின்பம்,
ஏங்கிக் கிடந்து பார்க்கின்ற
எழிலார் அல்லி மலர்கோடி
தேங்கிக் கிடக்கும் உன்னழகைத்
தெவிட்டா நுகர்என் மனக்கிணையோ? 7

வட்டிக் கணக்கும் வருவாயும்
வாராக் கடனும் நினைந்தமுங்கும்
முட்டாள் தனத்தால் தூக்கமின்றி
முனகிக் கொண்டு கிடப்பரன்றி
எட்டி வந்துன் அழகினையே
ஏறெடுத்தும் பாராரே!
தட்டி வைத்து மறைத்துவிட்டு
தவித்துக் கொண்டு கிடக்கின்றார் 8

அதிக உழைப்பால் களைத்தவனாய்
அசதி யாகத் தூங்குகிற
புதிய உலகத் தொழிலாளி
பொறிகள் மயங்கிக் கிடக்கின்றான்!
மதியே! உன்னைக் காண்பதற்கு
மனமிருந்தும் நேரமில்லை!
நிதியை வானில் எறிந்துவிட்டு
நிலத்தார் தூங்கிக் கெடுகின்றார் 9

எப்போ திந்த வேலைகளின்
    இரும்புத் தளைகள் ஒடியுமென
'அப்பா' என்று கதிரவனை
    அண்ணாந் தொருகால் பார்க்கின்ற
அப்போ தன்றி வானத்தின்
    அழகை எவன்தான் காண்கின்றான்?
தப்போ சரியோ! இவன்வாழ்வில்
    தழலே யன்றி நிழலெங்கே! 10

நிலவே! உனக்கு ஒப்பாக
    நேரஞ் சிறிது கதிரவனும்
புலரும் விடியல் வேளையிலும்
    போது மயங்கும் அந்தியிலும்
அலரும் செந்தா மரைபோல
    அழகு காட்ட அதுகாணற்
கிலராய் அந்தோ சுவர்இடையே
    இறுகிக் கொண்டு மடிகின்றார் 11

குழந்தையும் பித்தனும் கவிஞனுமாய்
    கோல மதியைக் காண்பரன்றி
அழுந்தும் உலகில் மற்றவர்கள்
    அமுத நிதியை ஏன்காணார்?
எழுந்து நின்று சுதந்திரமாய்
    இருப்பார்க் கன்றி இருட்கடலில்
விழுந்து கிடப்பார் காண்பாரோ
    மேலாம் சத்திய தரிசனமே! 12

‘காரு’ம் ‘மில்’லும் நெல்வயலும்
கணக் கில்லாத சொத்துகளும்
சீரும் இருந்தும் என்னபயன்?
சிந்தை நிறைந்து அமைதியுடன்
காரும் மதியும் விளையாடும்
காட்சி கண்டே இன்புறவே
நேரம் இல்லா விட்டாலே
நிதிகள் என்ன சுகம்தருமே! 13

ஓடி ஓடித் திரிந்தலைந்து
ஓய்ந்து போகும் நேரத்தில்
தேடி வைத்த பணம்வந்து
திருப்தி தருமா? நோய்நொடியில்
வாடி வதங்கும் போதெவர்தான்
வருத்தம் தீர்ப்பார் ஆதலினால்
கோடி கோடி இன்பங்கள்
கொட்டிக் கிடக்கும் உலகத்தில் 14

நாடி வந்த பயன்மறந்து
நலிந்து போகேல்! ஏ!மனிதா
ஏடி யன்ற கவிமலரில்
எழிலார் மனித முகங்களிலும்
பீடி யன்ற மதிநிலவிற்
பெருகும் அமுதக் குளியலிலும்
கூடும் இன்பம் வேறெங்கே
கூடும்? நினைத்துப் பாராயோ! 15

என்றிவ்வாறு பல நினைந்து
எழிலார் நிலவின் முற்றத்தில்
நின்றி ருந்தேன்! அப்போது
நிலவின் ஒளியில் தென்பட்ட
ஒன்றி ரண்டு காட்சிகளை
உங்கட் குரைக்க விரும்புகிறேன்
இன்று மக்கு நேரந்தான்
இருந்தால் சிறிது கேளுங்கள் 16

கதிர்தான் பகலில் மட்டுந்தான்
காணக் கிடைக்கும் கவினார்ந்த
மதியே! நீயோ இரவினிலும்
மற்றுஞ் சிலநாள் பகலினிலும்
விதியிற் சிறிது விலக்குறவான்
வீதி வழியே வருகின்றாய்!
புதிய கோலம் கொண்டொருநாள்
பொன்னாய், வெள்ளி போல்கின்றாய்! 17

சிலநாள் வந்து சிரிக்கின்றாய்!
சிலநாள் ஒளிந்து பார்க்கின்றாய்!
சிலநாள் எங்கோ போகின்றாய்!
சிந்தித் துனது சுதந்திரத்தின்
நலன்தான் விதியிற் கட்டுண்ட
ஞாயிற் றினுக்கே நிச்சயமாய்
இலதென் றுரைப்பன்! ஓய்வில்லா
தியற்றும் கடமை சுமையன்றோ? 18

வான மகள்தான் மின்கயிற்ருல்
வான கங்கை மத்தாகத்
தானே கடைந்த பாற்கடலில்
ததும்பும் வெண்ணெய் நீயென்ருல்
தேனும் அவள்தான் கடையுங்கால்
தெறித்த துளிகள் விண்மீன்கள்!
யானோ! தேவன்! என்கண்கள்
அள்ளிப் பருகும் சகோரங்கள்! 19

வெளியே இனிதாய்ப் பேசிவிட்டு
விஞ்சும் வஞ்ச நெஞ்சகர்போல்
ஒளியைப் புறத்தே கொட்டுகிருய்
உள்ளே மாசுற் றிருக்கின்ருய்!
அளிகள் சூழ்ந்து மொய்த்திட்ட
அல்லி மலர்போல் அமைந்துள்ளாய்
தெளிவாம் நிலவால் சான்றோர்போல்
திகழ் கின் ருய்வெண் திங்கள்நீ! 20

மென்மை உள்ளக் காவலர்கள்
மேவின் குற்றம் மிகுவதுபோல்
நின்மை யிரவில் தான்குற்றம்
நிகழும் பலவும் நிலந்தனிலே
புன்மை நெஞ்சர் அஞ்சாது
புரியும் கொடுமை பெரிதன்ருே?
நன்மை மறந்து தீநெறியை
நாடு வாரைச் சாடாயோ? 21

கரும காட்சி யாய்நின்று
காரி ருட்டில் காக்கின்ற
தரும தேவன் நீயென்று
தானே வானில் ஏற்றினரே!
மரும மிதனைப் புரியாமல்
மயங்கு கின்ற மனிதர்கள்
அருமை யிதனை மறந்தந்தோ
அலட்சி யந்தான் செய்கின்றூர்! 22

ஞாயி றென்னும் பெருஞ்சிலந்தி
நடுவான் தன்னில் ஞாலுமொரு
தூய கற்றை நூலிழையால்
தொய்வின் றியற்றும் வலைக்கூடே
நீயென் றுரைப்பன்! அதனாலோ
நின்பாற் பட்ட மனவண்டு
போய தன்றி மீளாமல்
பொலந்தேன் வீழ்ந்த எறும்பாகும்! 23

வெண்டா மரையாம் முகங்காட்டி
விண்முற் ..றத்தின் வெளிவந்து
கண்டா ரைத்தன் வயமாக்கிக்
காதல் வலையிற் சிக்கவைக்கும்
பெண்தான் யாரோ? என்றன்றோ
பேசு கின்றூர் விண்ணோர்கள்
மண்டு கம்போல் இவ்வுலக
மனிதர் மட்டும் காணாரே! 24

ஆலம் முதலில் வந்திடவே
அல்லற் பட்ட அமரர்க்கே
மேலும் அமுதம் தந்தின்பம்
மீட்டித் தந்த பெருங்கடல்தான்
காலக் கணிதக் கதிரவனின்
கற்றைச் சூட்டின் மாற்றாகப்
போலு மிந்த அமுதத்தைப்
புறத்தே மதியென் றளித்ததுவே. 25

வையக் கலத்தில் ஊற்றிவைத்த
வன்னப் பாலாம் கடலிதுவே
நையக் கலமாம் மத்தாலே
நன்கு கடைந்து காற்றென்னும்
ஐயன் திரட்டி உருட்டி விட்ட
அமுத மன்ன நவநீதம்
பைய எழுந்த பரிசாக
பசுவெண் டிங்கள் எழுந்ததுவே. 26

கோலக்கதி ரோன் பகலெல்லாம்
கொளுத்திச் சுட்ட தால்வெந்த
ஞாலம் கனன்று தேர்முறிப்பத்
திசைக்கொன் றாகப் போய்விழுந்து
மேலைக் கடலில் மிதப்பதுவும்
விரைந்து சிதறிக் கீழ்த்திசையின்
நீலக் கடலின் மிதப்பதுவாம்
நேமி மதியாய்த் தோற்றுவதே. 27

கார்கொண்டற் கூந்த லாடக்
கடலினிலே குளிக்கு மிந்தச்
சீர்கொண்ட இயற்கை நல்லாள்
சிரித்திடும் முகத்தை யன்றோ
பேர்கொண்ட திங்க ளென்றே
பேசுமிவ் வையம்! அழகின்
நேர்கொண்ட சாறெல் லாமே
நிலமுற்றும் பாயு தடடா! 28

மின்னற் சரட்டில் கொத்தாக
விண்மீன் பூக்கள் கோத்தெடுத்து
வன்னப் பந்து சமைத்திட்ட
வானும் மகள்தான் கடலினிலே
என்ன நோக்கில் தான்வீசி
எறிந்து விட்டுப் போனாளோ?
உன்னுங் காலே அவள்கணவன்
ஓடி வாவென் றழைத்தானோ? 29

தங்கத் தட்டு கிடக்குதெனத்
தரையாம் மகளுக் கறிவிக்க
அங்கங் கெழுந்து ஒன்றையொன்று
அதட்டி முந்தி ஓடிவந்து
சங்கக் குரலில் ஓலமிடச்
சரியென் றலைகள் நனையவித்தே
அங்கண் ணாய ஆம்பலினால்
ஆர்வத் தோடே காண்பதுகாண். 30

துள்ளும் கடலின் அலைமேலே
தூவெள் ளாடை போர்த்தாற்போல்
வெள்ளிக் கரைசல் ஊற்றிவிட்ட
விந்தை யமுதாம் வெண்ணிலவு
கள்ளின் மயக்கம் ஊட்டிவிடக்
கடலோ கூத்திட் டோலமிட
உள்ளே கிடக்கும் வடவைத்தீ
ஓய்ந்து குளிர்ந்து போனதுவே. 31

பனியின் கட்டி உருகிடல்போல்
பரிதி சுடலும்தேய் மதியாம்
தனிவெண் டிங்கள் எனும்பனிதான்
தன்பே ருருவம் சிறிதாகி
நனிபே ரொளியாம் தண்துளிகள்
ஞாலம் தன்னில் சிந்துவதோ
இனிய நிலவென் றியம்புகிறார்
இல்லா விட்டால் தேய்வானேன்? 32

வானப் பொய்கை மலர்ந்திட்ட
வண்ண மிகுபொற் றாமரையின்
தேனைப் பருக உண்ணுழைந்து
தேடும் வண்டோ மறுவிதுவே?
கானல் நீரில் வான்மலர்கள்
காணும் அமுதக் கவியின்பம்
தானே நிலவென் றிம்முன்றில்
தன்னில் முன்னே உலவுவதே? 33

பூரண கும்பம் வைத்துப்
பொலம்பூச் சிந்திக் கடல்தான்
ஆரண மொழிகள் ஓதி
அலைந்து திரிதல் என்ன
காரண மென்ப தோராக்
ககன வெளியில் வெறிதே
வாரண முகில்கள் தாமும்
வரிசையின் அலைதல் காணாய்! 34

நேர்த்திக் கடனுக் கெறிந்த
நேர்செவ் விளநீர் மெல்ல
நீர்த்திர ளலைக ளாலே
நீளச் சென்றக் கரையில்
சீர்த்தி யுடனே மிதக்கும்
செய்தி கண்ட சிறுவர்
ஆர்த்துக் கைக்கொள் வதற்காய்
அலைமேற் பாய்தல் காணாய்! 35

வானம் தூட்டைப் போக்குதற்காய்
மருந்து வேண்டிப் பாதரசம்
தானே பெற்றுச் சிந்திவிடத்
தவறி வீழ்ந்த மணியென்னப்
பானேர் நிலவும் தோன்றுவதைப்
பார்த்த கடல்தான் துள்ளுவதும்
ஏனோ? யாரே கைதவறி
எய்ப்புற் றிங்கே மருளாதார்? 36

தங்கத் தோணி யிதுபையத்
தவழ்ந்து எங்கே போவதுவோ?
பொங்கும் கடலின் அலைமேலே
புரண்டு புரண்டு வருவதுவோ?
எங்கும் ஒளியின் வெள்ளத்தால்
எல்லாம் வெண்மை யாக்கியே
கங்குல் மாசைச் சுதைபூசிக்
கரையச் செய்தான் யாரிவனோ? 37

கண்ணின் விருந்தாய் இதயத்தில்
களிப்பை நல்கும் அருமருந்தாய்
விண்ணின் அடியும் மண்முடியும்
விழைந்து சேரும் அடிவானத்
துண்ணும் அமுத கலசமிது
உம்பர் நமக்குத் தந்தாரோ?
எண்ணின் இதற்கிங் கீடில்லை
எழிலின் மொத்தப் பிழிவாகும் 38

கலையி னின்பந் தரவந்த
கவினுய்க்கடலைக் கலக் குறுத்தும்
அலைமே லெழுந்த நவநீத
அமுதாய் குமுத மலர்மங்கை
தலைவ னாக வருமிந்த
தண்தீம் கதிரின் காட்சியினை
உலைவில் லாமல் காண்பதுவே
உலகிற் பிறந்த பயனுமே! 39

தன்னைத் தவிர வேறில்லாத்
தகைமை யுடனே தினந்தோறும்
என்னைக் கண்டு பேசுதற்காய்
எழுந்து வந்த தலைவனையே
புன்னைக் கானல் கழித்துறையில்
புதிதோ ரின்பம் பெறுவதற்காய்
இன்னே செல்லும் என்மலராம்
இதயம் உருகல் வியப்பாமோ ? 40

பேரண் டங்கள் முழுதும்தேடப்
பெற்றும் வேறெங் கில்லாச்
சீரின் இயன்ற ஒளியின்அமுத
தேசைப் பற்றிப் பேசி
யாரிங் குருகா துள்ளார்கவிஞர்
யாவர் பாடா திருந்தார்?
நீரில் எழுந்து நிலத்தைச்சுற்றும்
நேமி யழகைக் காணீர் 41

விழுங்கிய இருளே மறுவாய்த்தோற்ற
விரைந்தெழு திங்கட் செல்வன்
செழுங்கதிர் பாய்ச்சிப் பனிமுடிஇமயம்
சிதைந்தொரு நூலா டைபோல்
எழுந்திவண் போர்த்த தென்னவெண்மை
எனுமொரு நிறத்தின் அழகை
ஒழுங்குற முழுதும் காட்டித்தனது
உளத்தியல் பிதுவென் றுரைப்பான் 42

பெண்முக மென்று பேதுறுமடவார்
பிடிப்பரென் றஞ்சிய மதிதான்
தண்முகக் கடலின் தாலாட்டிணையே
தவிர்ந்தெழுந் துயர்ந்த வானில்
மண்முகம் நோக்கும் மலரிதுவென்ன
மாண்புடன் மேலெழுந் துலவக்
கண்முகத் திரண்டுகாணு தெனவே
கருதியே மனிதரும் கவல்வார் 43

உலாவரும் தென்றல் தவழும்
உடுநிரை பொதிந்த வானத்
திலாததோர் செல்வம் யாதென்
றியம்பிடு மாறு போல
நிலாவது வந்து தோன்ற
நிலத்திடை முற்றத் துற்ற
எலாருமே பெற்ற இன்பம்
இனைத்தெனக் கூற லாமோ? 44

கலையது நழுவ மங்கை
கனகநன் மேனி எழிலைத்
துலையிலா மணிகள் சிந்தத்
தோற்று காட்சியைப்போற் கண்டே
நிலைகுலைந் திடுவோர் போல
நிலாவது சிந்தும் அழகின்
அலைகளில் திளைத் திங்கியாரே
ஆடியே மயங்கா துள்ளார்? 45

மங்கை — மங்கு + ஐ

பூவின் இதழ்கற் பூரமுடன்
பொன்னென் ருேதும் இவையெல்லாம்
மேவும் கடினத் தன்மையென
மேலாம் அவற்றை எலாம்குறைத்துக்
காவிற் திரியும் தென்றலொரு
கலந்தோர் புதிய பொருளாக்கித்
தேவன் தந்த வரம்என்னத்
தேசுற் ருெளிரும் நிலவிதுவே! 46

மஞ்சள்ப் பொடியை மஞ்சோடு
வானிற் கலந்து தெளிந்தாற்போல்
செஞ்சொற் கவிதை யின்பமெனச்
சேரும் நிலவின் அமுதூறல்
நஞ்சிற் பொலியும் மறுநிக்க
நாடா தந்தோ பிறர்குறையை
எஞ்சா தொழிக்க முயல்வார்போல்
எங்கும் பொங்கிப் பரந்ததுவே 47

காட்டிற் சிந்தி கடல்சிந்திக்
கனகக் குவைபோல் தோற்றுமணல்
மேட்டிற் சிந்தி மலைசிந்தி
மீந்த அமுதத் துளிகளிவை
காட்டும் இன்பம் இதுவென்ருல்
கலைமா மதியின் முழுநிலவென்
பாட்டில் சிந்தப் பெற்ருலெப்
பாடு படுமோ கவியுளமே! 48

கடன்வாங் கித்தான் மழைபொழியும்
கார்கள்! அதுபோல் நீயுந்தன்
உடன்பாட் டோடு சூரியனின்
ஒளியைக் குளிர்வித் தளிக்கின்றாய்!
மடன்பட் டிழியு மிருள்நீக்கி
வானிற் பூத்த மீனெல்லாம்
இடன்பட் டெங்கும் சூழ்ந்துவர
இரவில் ஆட்சி செய்கின்றாய்! 49

முத்துக் களையே சிதறியே
முழுவெண் ணிலவே உனைக்காவல்
வைத்த தெவரோ அறிகிலன்யான்!
வையத் தவரின் பேராசை
மெத்த வென்ப தறிந்ததனால்
மேவும் உன்றன் காவலிது
ஒத்த தெனினும் இம்மனிதர்
உனையும் தாண்ட முனைவாரே! 50

நிலவே உன்பால் ஒருமனிதன்
நிலத்தி விருந்து வலம்வந்தே
உலவிக் கால்கள் பதித்ததுவும்
உண்மை! எனினும் நீயுமவன்
நலமே நாடி வையத்தின்
நட்பை யுணர்த்தி விடுவித்தாய்!
இலதேல் இவரைப் பொருட்படுத்தா
இயல்பைக் காட்டி விட்டனையோ? 51

விண்ணின் அமுத விளக்கேகி!
விளையாட் டாய்த்தன் அளிபூண்டு
மண்ணின் குமுத மலர்மங்கை
மனங்கள் கோடி யலர்வித்துப்
பெண்ணின் எழிலே நுகர்ந்துபினும்
பிரமச் சரியம் தவிராத
கன்னன் போல விளங்குவதன்
கருத்தை யோர்ந்து வியக்கின்றேன்! 52

வானத் திலேயில் கார்மேக
வகையாம் கறிவைத் தளவற்ற
மீனக் குவையாம் சோற்றிடையே
மேல்வைத் திட்ட அப்பளமாய்த்
தானே தோற்றும் விருந்திதனைத்
தரையில் கிடந்து பட்டினியால்
ஊனே மெலிந்த ஏழைபோல்
உள்ளம் பசிக்கப் பார்க்கின்றேன் 53

அமையும் பிஞ்சு கனியாக
அதனைப் பெற்ற மரமதுவே
சுமையைத் தாங்காத் தாழ்வதுபோல்
சொக்கி மயங்கித் தளர்கின்றேன்!
உமையின் கேள்வன் முடிமிசையே
உள்ள பிறையே! நீமுதிர
இமைகள் இடையூ றிலாதொழியின்
இற்று முறிந்து போகேனே? 54

பாட்டில் மலர்ந்த தாமரையின்
பருவ இதழாம் பொற்றகட்டின்
ஏட்டில் வரைந்த எழுத்தென்ன
இசைக்கும் வண்டின் பொலிவுற்றுக்
காட்டும் இந்த மறுவகற்றக்
கழுவும் நீர்உன் பொன்னுடலை
ஆட்டி வருவ தாலன்றோ
அம்பொன் னொளிதான் ஆயதுவே! 55

தத்து கடலின் ஆழத்தில்
தங்கி உறங்கிக் கிடந்திட்ட
முத்தெல் லாமே கோத்ததிலே
முனைகொள் சந்தின் இடுக்கினிலே
தொத்தார் மலரின் பொடிவைத்துத்
தூய வைர மணிபொதிந்து
வைத்த நகையைக் கூந்தலிலே
வான நங்கை பூண்டனளோ? 56

என்று பிறந்த திவ்வுலகம்?
என்றே எவருக்கும் தெரிவரிதாம்!
அன்று தொட்டே இன்றளவும்
அமுத மீந்தும் அழியாது
நின்று நிலவும் நிலவிதனின்
நீர்மை என்னே? பனியிமயக்
குன்று கோடி யிருந்தன்றோ
குளிர்மை நீங்கா திருப்பதுவே 57

தூவி யன்னம் வான்பொய்கை
துழாவி நீந்தி வருவதுவோ?
பூவின் மென்மை பெற்றுக்கற்
பூரப் பொடிதான் திரண்டதுவோ?
மேவு வானக் கடற்கரையில்
மிளிரும் உப்பின் குவையிதுவோ?
ஏவ தென்றே அறிகிலமால்!
எனினும் இன்பம் தெரிகின்ரும்! 58

பானிலா அமுதத் துளிகள்தாம்
பருகியே வாழும் சகோரம்
போனிலா தேஞே இந்தப்
புலையுட லிதனைப் பெற்றேன்!
தேனிலா மலரே போன்றேன்!
தேனிலா வாய தேவ
ஏனிலா தோ டுகின்ருய்?
எனையுமேன் அழைக்க மாட்டாய்! 59

நிலவான் தன்னில் உன்போல்
நீந்தியே கோல மிக்க
நூலுறு முகில்க ளூடு
சுதந்திரப் பறவை யாகி
மாலுறும் உடலின் எடைதான்
மாயவே மிதக்கப் பெற்றுன்
காலடி தன்னில் வாழக்
கருணையேன் காட்ட மாட்டாய்! 60

தேயுறும் பிறைபோல் தேய்ந்து
தீர்ந்திலென்? இல்லைநல்லோர்
நேயமே போல வளர்ந்து
நிலைத்திருந் திடிலென் உலக
மாயவாழ் விதனில் என்றன்
மனமது நின்போல் கிடந்தும்
தூயநின் அமுதி னன்றோ
தொலைந்திடா திருந்த வாறே 61

வள்ளலாய் நின்று நீதான்
வானுறும் பூவில் ஊறும்
கள்ளினைச் சொரிந்த தாலோ
காசினி முழுதும் இந்த
நள்ளிருட் டினிலே மயங்கி
நாவொடுங் கிடவே யாதோர்
புள்ளிசை கூட இன்றிப்
புலன்அவிந் தியலு மாறே! 62

பிடிபடச் செறிந்த இருளைப்
பிளந்துன தொளிதான் நுழைந்து
அடியிட லாகி மண்ணோ
டளைந்திடப் பெற்றங் கிருந்த
கொடியுட லூடு போந்து
குளிர்மதித் தாயைக் காணக்
கடிமல ராகி வந்த
காட்சியை என்னென் றுரைப்பேன் 63

பூமக ரந்தப் பொடியும்
பொற்றுகள் தூசி யோடு
தாமரை இதழும் பொதிகைத்
தண்ணறுங் தென்றல் தானும்
தூமலர்ப் பொய்கை நீரில்
தூயவான் னீலம் சேர்த்துக்
காமுறு வெள்ளை யடித்தாய்
ககனமும் திசைகள் நான்கும்! 64

ஆய்வரும் புதிராய் நிற்கும்
அற்புத மாய இயற்கைத்
தாய்முகம் நோக்க வைத்த
தாமென வானில் மிளிர்ந்து
காய்கதிர் ஒளியை வீசும்
கண்ணாடி யாய மதியே!
நோய்வரத் தேய்ந்தும் நிலைத்தல்
நுவலரும் அமுதி னன்றே! 65

கானலில் கிடந்து குளிர்ந்த
கடலலைப் பாட்டைக் கேட்டு
வானிடை நீயும் விண்மீன்
வரிசையும் உலவு கின்ற
தேனமர் காட்சி காணும்
திகட்டாத இன்பின் அன்றோ
ஊனுறும் துயர்கள் மறந்தே
உலகிடை யுவப்போ டிருப்பேன் 66

என்றிவை கூறிக் கவிஞன்
எழுமதித் தோற்றம் கண்டும்
மின்றிகழ் வானில் நீந்தி
மெல்லவே உலவல் கண்டும்
தன்றிறல் காட்டிப் பாடத்
தனிப்புகழ் மதியார் போல
என்றும்போல் சென்று வானத்
திருள்கெட நடுவன் நின்றான்! 67

புகழினைக் கண்டு மனத்தில்
பொறாதவ ராகிக் கயவர்
இகழெனும் அலர்கள் தூற்றி
எழுந்தனர் போல முகில்கள்
நகவிலாக் கருத்த நெஞ்சம்
தனனையே காட்டித் துகிலால்
முகமது மூடு வார்போல்
முழுமது தனையே மூடும் 68

கண்பூத்துப் போமாறு கண்டுகண்டு
காதலித்தேன் நீஇரண்டாய்க் காட்சிதந்தாய்
விண்பூத்த மாமலரே! நீயும்நானும்
விழைந்தொன்றாய் மாறிவிட்டோம் சிறுமியான
பெண்பூத்துப் பேரழகின் சாறேபொங்கிப்
பெருக்கெடுத்து நிற்கின்ற காட்சியாகி
எண்பூத்த அமுதானாய்! இரவுமுற்றும்
இமையாது கண்டிதயம் இணைந்துவிட்டேன் 69

வள்ளலே கோடி கோடி
மானுடர் தமது தூய
உள்ளமாம் பாத்தி ரத்தில்
ஊற்றிய ஆனந் தத்தின்
வெள்ளமே வற்றா தின்றும்
விண்ணின் றூற்று கின்றாய்!
கள்ளமே தீர்த்திவ் வுளத்தில்
கவியமு துண்ணச் செய்தாய்! 70

பொன்னெனப் பொலிந்த நீதான்
புலர்காலைப் போதில் தீதில்
மின்னொளி குறைந்தா யேனும்
வெள்ளியாய் மாறி விட்டாய்!
என்னினும் செம்பி யம்மற்
றிரும்பினை போல மாட்டாய்!
உன்னையே நல்ல குடியில்
உதித்தவர்க் குவமை சொல்வேன்! 71

வானத்து மதியே! நின்னை
வார்கடல் நிழலிற் கண்டு
சீனத்துக் கவிஞன் பித்தாய்ச்
செத்ததோர் செய்தி கேட்டேன்
யானத்து விதமாய் அவன்போல்
ஆதற்கோ போத மில்லை!
ஞானத்தில் மிக்கார்க் கன்றி
ஞாலத்தார்க் காமோ முக்தி? 72

இவ்விதம் கவிஞன் கூறி
இதயத் தின்பப் பெருக்கில்
செவ்விதின் இருப்ப ஆங்கே
சிறிது தூரத் தொருவன்
கவ்விய காதல் மிக்க
கனிமொழிப் பாவை யவளின்
செவ்விதழ் பருகத் துடிக்கும்
சிந்தையன் செப்பு கின்றான் 73

மருள்படு நெஞ்சது சஞ்சலிக்கும்
மனநிலை காட்டியே சிறைப்பட்ட
இருள்படு கருவிழி மணிப்பாவை
இரண்டுமே ஓடிடத் துடித்திடினும்
புருவவிற் பூட்டிய பூங்கணைபோல்
பொன்னெழில் புதுமலர் எள்நாசி
உருவதைக் கண்டதோர் அச்சமன்றோ
ஓடிடத் தயங்கியே நிற்பதுவே 74

கன்ன மாம்பழம்உண்ணத் துடித்திடும்
கருவிழி வண்டோச்சும்
என்ன உயிர்ப்பெனும் சன்னக்காற்றினுக்
கிதயமோ பந்தாடும்!
அன்னநடையிள மின்னல் கொடியிடை
அமுத மொழி மடந்தை
வன்ன முகமதை உன்னோடுவமைசெய்
துள்ளம் உருகாரோ? 75

காவியங் கண்ணை மேவியமறுவாய்க்
கருதியே பார்க்கின்றார்!
பூவியல் புடைய தேவியின் முகத்தைப்
பொன்னிலா வென் கின்றார்!
ஆவியை ஈர்க்கும் ஓவியம் இரண்டில்
அதிகமே தறியாமல்
நாவிரு லொன்றும் ஆவலோ டுரையா
நலமர லுறுகின்றார்! 76

கட்டிள மேனி தொட்டணைத் தின்பக்
கதுப்பினை முத்திப் பித்துற்றுக்
கிட்டிய பிறகு முட்டிய வெறிதீர்ந்து
எட்டியே நின்றனல் தணிந்திடுவார்!
பட்டினை விரித்துப் பனனீர் தெளித்துப்
பாட்டினைக் காட்டிய நிலவுன்னை
எட்டிடற் கியலார் விட்டிடற் கியலாரிவ்
எழிலினை எப்படித் துய்ப்பதுவோ? 77

அன்பெனும் அமுதம் கிட்டின்
அகில உலகத் துள்ள
துன்பெலாம் தீரும் என்ற
தொல்லோர் சொல்லை மெய்ப்பித்
தின்பிலே களிக்கும் அந்த
இருவரும் இதயம் ஒன்றி
மன்பதை மறந்து போனார்!
மற்றுமேன் வெற்றுப் பேச்சே! 78

நிலவிடை மற்ருேர் இருவர்
நெருங்கியே கைகள் கோர்த்துக்
கலவியில் சிந்தை தோயக்
கண்களில் மருட்சி மேவ
உலகினர் காணுர் என்றே
உளமதில் தெம்புற் றுடலின்
நலமதைப் பருகத் துடித்து
நடுமுகில் வரவை விழைவார் 79

இடையினில் கரங்கள் சுற்ற
எண்ணத்தில் விரைவு முற்ற
நடைமெலிந் தங்கோர் மரத்தின்
நன்னிழல் தேடிச் செல்வார்!
புடையுள புன்னைக் கானல்
புள்ளொலி ஒடுங்கி மிடத்தை
அடையவும் நெஞ்சம் உருகி
அணைந்தனர்! பிணைந்தா ராங்கே! 80

இல்லறக் கிழத்தி ஒருத்தி
இடையினில் மழலை ஏந்தி
சொல்லுறும் குதலை யமுதம்
சொக்கியே பருகித் தானும்
நெல்லுறு வெண்சோற் றுண்டை
நிலவினைக் காட்டி யூட்டும்
நல்லதோர் காட்சி கண்டே
நனிமகிழ் வூறும் நெஞ்சே! 81

மழலை யமுதம் செவிபருகி
வாயில் அமுதம் அவள்ஊட்ட
எழிலார் நிலவின் அமுதினிலே
இப்பார் முழுதும் மயக்குறவே
பொழிலில் பூத்த புதுமலர்கள்
பூந்தேன் அமுதம் தந்துதவ
வழியே வந்த இளந்தென்றல்
வாச மளைந்து சென்றிடுமே! 82

நிலவி லிந்த கழிக்கானல்
நேசமிக்க பாசத்தார்
நலமோ டன்புப் பெருக்கினிலே
நனைவித் தற்போல் களிதுள்ள
இலமொன் றிங்கே மின்பரவர்
என்ப துணர்த்த இச்சூழல்
நிலமே இன்பத் தோட்டமென
நெஞ்சம் வேட்கை யோடேங்கும் 83

இங்கே பிறக்கும் பேறுற்றே
என்றும் நிலவில் இந்நிலத்தில்
பொங்கும் அழகைக் கண்டின்பப்
போதை தன்னில் புரளாமல்
எங்கோ நான்கு சுவர்நடுவே
இதயம் விற்றுப் பணிமூழ்கிக்
கங்குல் முழுதும் கண்விழித்துக்
கடமை புரியும் விதிஎன்னே? 84

ஆலைதன்னில் யந்திரத்தின்
அரவம் தன்னில் செவிகைப்ப
வேலை வேலை எனத்திரியும்
வேதனைகள் தனைநீக்கி
காலை மாலைச் சுடர்அழகும்
கங்குல் முழுதும் மதியழகும்
ஓலக் கடலின் ஓரத்தில்
உட்கார்ந் திருந்து பாரேனோ ? 85

சிறிது தூரம் செல்கின்றேன்
சின்ன ஓலைக் குடிசையிலே
உறுமோர் பிய்ந்த ஓட்டைவழி
உள்ளே எட்டிப் பார்க்கின்ற
நறுமென் னிலவின் உள்ளம்போல்
நானும் மறுவுற் றயர்கின்றேன்
வறுமை என்னும் பேய்ப்பிடியில்
வாடி வதங்கும் உருவங்கள் ! 86

ஒருநாள் வரம்பில் கடல்வழியே
ஓடம் கொண்டு சென்றவன்தான்
வருவான் வருவான் என்றவனின்
வரவை எதிர்பார்த் தேமார்ந்தோள் !
இருஆண்டு கள்தான் கழிந்தின்றும்
எதிர்ப்பார்த் தின்பம் தனையிழந்து
திருவில் லாத இல்லத்தே
தேசற் றந்தோ படுத்திருப்பாள் 87

அருகே அவள்தன் குழந்தை
ஆணும் பெண்ணும் ஆமிருவர்
உருவ அழகு மிகுந்தாலும்
ஓட்டைக் கலம்போல் பொலிவற்றுக்
கருவி லிருந்தே துயர்ச்சிலுவைக்
கருவி சுமந்து வந்தோராய்
மருவி யிங்கே துயில்கின்றார்
மனத்தி லிரக்கம் மிகுவிப்பார் 88

உப்பின் குவையாம் வெண்சோற்றை
உண்டு கடல்நீர் குடித்தாங்கே
தப்பித் திரியும் அரக்கன்றான்
தரையிற் படுத்தே றட்டையிடல்
ஒப்பித் தோன்றும் ஓசையுடன்
ஓடித் திரியும் அலைநிரைகள்
கப்பல் கிழிக்க வாயலறிக்
கரையை நோக்கி ஓடிடுமே 89

மீனின் உணங்கல் தனையன்றி
வேறோர் செந்நெற் சோறின்றி
தானும் குழந்தை இருவரும்
தணியாப் பசியோடிருந் துழன்றார் !
வானி லூரும் மதியழகை
வறுமைப் பிடியிலகப் பட்டோர்
காணு வாரோ ? நோய்முற்றின்
காத லுணர்வும் சாதலுறும் ! 90

கடலை யேனும் தோணியினுல்
கடந்து விடலாம் ஆனுலும்
சுடலை தின்னக் காத்திருக்கும்
சுகநாட் டத்திற் கல்லாடும்
உடலைப் பேணும் வழியின்றி
உறுமிவ் வறுமைக் கடல்கடக்கப்
படகொன் றில்லை! என்செய்வேன்
பாவி யேனென் றழுதுழன்றாள்! 91

மறுமை யுளதோ? இருந்தாலே
மனித ராகப் பிறவாமல்
வறுமைச் சேற்றில் வீழாமல்
மண்சேற் றிடையே தாழ்நிலையில்
பொறுமை யாகக் கிடந்துழலும்
புழுவா யேனும் பிறப்பெடுப்பேன்!
உறுமிப் பிறவி பாழ்என்றே
உள்ளம் நலிந்த காரிகையாள் 92

ஒருநாள் வாழ்க்கை யானுலும்
உதிரு முன்யே மதுவார்த்துத்
தருவ தாகி மணமீந்து
தருவிற் பொருந்திக் கண்விருந்தாய்
உருவ எழில்காட் டிடுமிந்த
ஒளிமென் மலராய் வாழாமல்
எருவில் மக்கி மடிபுழுப்போல்
இனியும் வாழ்வ தென்னென்போள்! 93

குழந்தை களையே காப்பாற்றும்
கொள்கைக் கடமை தானன்றி
அழுந்து மிந்த வாழ்விற்கோர்
அர்த்த மில்லை! விருப்பில்லை!
பழந்தெய் வங்கள் எல்லாமே
பார்த்துச் சிரிக்கு மேயன்றி
விழுந்தொ ழிந்து போயிற்றோ?
விண்ணப் பங்கள் கேட்டிலதோ? 94

ஆக்கும் கரமே அழித்திடுமோ?
அழகு மிக்க தளிரிலைகள்
தேக்கி வண்ணக் கலவைகளால்
தேசுற் றொளிரும் கொடியிதனைப்
பூக்கு முன்பே வறுமைத்தீ
பொசுக்க விட்ட தெவர்செயலோ?
காக்கும் தெய்வம் இலையோஎன்
கண்ணீர் வெள்ளம் வற்றுதோ? 95

இன்பப் பகலும் துன்பமெனும்
இருளும் இன்றி இடைநடுவே
மன்ப தைமேல் ஆசைதனை
வளரச் செய்யும் நம்பிக்கை
தென்பி னைப்போல் மதிமுளைத்துச்
தேசுற் றொளிரும் என்றாலும்
அன்பில் லாத உலகினிலே
அனைத்தும் இருளாய் தோன்றுவதே. 96

என்று ரைத்த ஏந்திழையின்
இதயம் சுபட எரிநீங்க
என்றும் போலே இருக்கின்ற
இரணி யத்து முசையெனத்
துன்று மிருளும் மதிநிலவும்
துயரைப் போக்கி மறக்கடிப்ப
நன்று தூங்கு கின்ருளே !
நாமேன் எழுப்பல் ? அயல்செல்வாம் ! 97

இதுவொரு சிறிய வீடு !
எழில்மிகு முன்றில் தன்னில்
மதுமலர் விரியும் முல்லை
மல்லிகைக் கொடிகள் செடிகள்
சதுருடன் அமைந்த கிணறு !
தண்ணீர் இறைக்கும் வாளி
புதுமையாய்ப் பொலியும் இங்கே
புகுந்துநாம் காணச் செல்வோம் 98

இங்கிரு மனிதர் தம்முள்
இதயங் கலந்த நட்பால்
பொங்குமிந் நிலவின் பயனைப்
புகுமிளந் தென்ற லோடு
நுங்கிய வாறு செய்தி
நூறுகள் கூறிக் கொண்டு
தங்கினர் ! அவர்தம் பேச்சைத்
தனித்துநின் றறிவோ மின்றே 99

நண்ப! இந் நிலாத்தான் முன்பு
நம்பிரான் சிவனின் தலையில்
திண்புடன் இருந்த லாலே
தேய்வது நீங்கிற் றென்றும்
பண்பிலா தாசான் தாரம்
பற்றினன் என்றும் தேவர்
உண்பரென் றுரைப்ப தெல்லாம்
ஒப்புமோ? சொல்க என்றான் 100

தோழ! அப் புராணக் கதைகள்
தூசிடைப் பொதிந்த மணிபோல்
ஆழமாம் தத்து வங்கள்
அறிவிலார் அறிதற் காக
வாழுமோர் நெறிகள் காட்ட
வகுத்தநற் கற்ப னைகள்!
ஏழையார் உண்மை என்றே
ஏமுறு கின்றார் பாவம்! 101

அழகுடன் தேய்தல் வளர்தல்
அற்புதக் கதையாக் கிடுவர்!
பழமைசால் அண்ட கோளப்
பாங்கினில் இந்த உலகின்
நிழலது விழ இராகாம்
நீள்பெரும் பாம்பு பற்ற
உழலுமோர் கதையாய்ச் சொல்வர்!
ஒளிநூலார் வேறு சொல்வார்! 102

கோள்களே சிதறி வீழக்
குளிர்ந்தன நிலவும் நிலமும்!
நாள்களும் கழியும் உலகில்
நற்பல உயிர்கள் தோன்றும்:
ஆள்களும் தோன்றி இன்று
அம்புலி தன்மேல் தனது
தாள்களும் வைத்து விட்டார்
சரித்திரம் மாறக் கண்டோம்: 103

மதியினை மதியின் வலியால்
மனிதனும் வென்று விட்டான்!
விதியெனச் சோம்பிக் கிடத்தல்
விஞ்ஞான உலகிற் காகா:
புதியன கண்டு பொதுமைப்
புதுயுகம் காண வேண்டும்!
இதிலொரு கருத்து மாற்றம்
எவருக்கும் இல்லை யன்றே! 104

பிறைவளர்ந் துவாவில் முழுமை
பெறினுமே பின்னும் தேய்ந்து
மறைவதே போல இந்த
மன்னுயிர் வாழ்க்கை முடியும்!
நிறைகுறை காண்ப தெல்லாம்
நீரினுட் குமிழி அளவை
முறையுடன் காண்ப தன்றி
முடிவிலே மிச்சம் என்னே! 105

உவா — பௌர்ணமி

அறிவினுல் விஞ்ஞா னத்தால்
ஆகுவ தெல்லாம், ஆயின்
பொறியினுல் துய்த்த போகம்!
பொக்கெனப் பொடிந்து வீழ்வ
துறுதியா மன்றி வேறே
உள்ளதோர் நிலைத்த பயன்தான்
சிறியதே எனினும் காணேம்!
சிந்தித்தால் எல்லாம் மாயம்! 106

கண்ணொளிக் கோளா றுற்ருல்
கவின்மதி யிரண்டாய்த் தோற்றும்!
தண்ணீரில் ஆங்காங் கமைந்து
தனிமதி கோடி தோன்றும்!
எண்ணுறின் உலகத் தோற்றம்
இவ்வுயிர்த் தோற்றம் இதுபோல்
நண்ணரும் புலவர் கூறும்
நயவுரை சிந்தித் திடுவாய்! 107

அறநெறி பெரிதென் றெண்ணி
ஆசைகள் அனைத்தும் மாயத்
துறவதே கொள்ள வேண்டும்
துறக்கமே அதுவே யாகும்!
பிறவெலாம் துன்பம் தந்து
பேரிடர் பின்பு காட்டும்!
திறமிதைத் தெளிந்த பின்னும்
தேடுவ துண்டோ இன்பம்! 108

புலன்களால் ஈர்க்கப் படுப்
போகமே தேகத் தாலாம்
நலன்எனக் கருதி வாழும்
நாளினைக் கழித்த பேர்கள்
கலன்கவிழ்ந் திடவே பிறவிக்
கடலிடைத் தத்த ளிப்பார்!
இலன்எனச் சொன்ன கடவுள்
இதயத்தில் முளைக்கக் காண்பார்! 109

உலகா யதவா தத்தால்
உண்பதே பிறவி நோக்கம்
பலகால் ஆய்ந்தும் வேறோர்
பதவிதான் இல்லை என்பர்
திலகவாள் நுதலார் இன்பம்
தேடலே முயற்சி என்பர்
இலகுமிப் போக்கால் மனத்தின்
இலட்சிய வெறிகள் மூளா! 110

மண்ணினிற் காலூன் றிடினும்
மனிதனே சிறகை விரித்து
விண்ணிடைப் பறக்க வேண்டும்!
வேள்வியின் நோக்கம் இதுவே!
எண்ணுமிக் கற்ப னையில்
இருக்குமோர் இன்பம் இந்தப்
புண்ணுடற் போகத் திற்கும்
புலன்வெறி தனக்கும் உண்டோ! 111

நோயு அழுந்தி எந்த
　　நொடியிலோ வீழும் இந்தக்
காயமே பெரிதென் றெண்ணிக்
　　கள்ளொடு களவும் கொண்டு
தீயதோர் வாழ்க்கை வாழும்
　　தீனரை ஏனோ என்றன்
வாயாது வாயா திகழ!
　　வாழ்த்தவும் மறுக்கும் நண்ப! 112

ஆசையால் சுரண்டிக் கொழுக்கும்
　　அற்பரால் அன்றோ இந்த
நீசரும் நீதி நீங்கி
　　நித்தமும் செத்துப் பிழைத்து
மாசுறு கின்றார்! இதனை
　　யாற்றவே வேண்டின் நீங்கள்
பேசுறும் பொதுமை மட்டும்
　　பேணினால் போதா தப்பா! 113

மனமதில் மாற்றம் வேண்டும்
　　மாபெரும் ஆசை நீக்கி
இனமுடன் ஒத்து வாழ
　　இயன்றதோர் அளவே ஈட்டி
கனவினில் வாழா துழைத்துக்
　　கடமைக ளாற்றி மூல
தனமது சுரண்டா வண்ணம்
　　தடுத்திட வேண்டும்! உண்மை! 114

இதற்கொரே வழிதான் உண்டு
எல்லோரும் உழைக்க வேண்டும்;
மிதமுடன் துய்த்தே எளிய
மேலுறும் வாழ்க்கை வாழ்ந்து
எதற்கெடுத் தாலும் தேவை
ஏற்றமே இன்றிச் சுருக்கி
நிதமொரு கோல மின்றி
நிம்மதி வாழ்க்கை வேண்டும்! 115

கனிவளம் பெட்ரோல் இவைஎக்
காலமும் கிடைக்கு மென்றே
இனியிருந் திடற்கு மாகா(து)
என்றேனூர் நாளில் தீரும்!
மனிதரோ தொடர்ந்து பிறப்பர்
மன்னுயிர்த் தேவைப் பசிக்கே
இனியநல் லுணவு நல்க
எழுகடல் நீரும் போதா! 116

முகிற்குலம் சொரிந்தென்? அணைகள்
முடுகியே கட்டி னுலென்!
திகிலுறச் செய்யும் மக்கட்
தேவையும் பெருக்கம் தானும்
மிகுவதால் ஆடம்ப ரத்தை
விழையாது எளிய வாழ்வில்
புகுவதே தரும மாகும்!
பொதுமையின் புதுமை வாசல்! 117

எளியதோர் உணவு உடைகள்
இருப்பிடம் எல்லாம் என்றால்
தெளிவுடன் உலகோ ரெல்லாம்
தேவைகள் சமமாய்ப் பெறலாம்!
இளிவரல் இல்லை இதனால்
இழிவதும் இல்லை! உலகில்
களியமர் காதல் அன்பும்
களிநடம் புரியும் அன்றே! 118

பேதங்கள் நீங்கிப் போகும்!
பேணிநற் சுதந்தி ரந்தான்
ஏதங்க ளின்றி நிலைக்கும்
எளிமையால் பகைமை யன்றி
நீதியாய் உலகம் நிற்கும்
நிம்மதி கிடைக்கும்! போர்கள்
சாதியின் வெறிகள் துயர்கள்
சட்டெனப் பட்டுப் போகும்! 119

என்றிவை சொல்லும் போதே
எதிர்த்தவன் கூற லானான்!
நன்றுநின் மொழிகள்! மக்கள்
நலமதே எனினும் சட்டம்
நின்றிடின் அஞ்சும் மனிதர்
நீதிக்கு அஞ்ச மாட்டார்!
ஒன்றிது உறுதி! சட்டம்
உளமதும் ஒப்பல் வேண்டும்! 120

அதுசரி! மனித உயிர்கள்
அல்லது மற்ற உயிர்கள்
மதியினில் இல்லை என்பர்
மாபெரும் தீக்கோ ளத்துக்
கதிரினில் இருக்க முடியா!
ககன வெளியில் உள்ள
புதியதோ ரண்டத் தேதும்
புதன்செவ்வா யிதனில் உண்டோ? 121

எனஅவன் சிந்தை என்னும்
எல்லையின் விளிம்பைத் தொட்டு
வினவிட. அன்ப! அண்ட
வெளிதனைப் பற்றி அறிந்த
கனவுகள் சிலவே! வானின்
காலமும் இடமும் கடந்த
நினைவுகள் கோடி எனினும்
நேர்படச் சொல்லற் கியலா! 122

செவ்வா யதனில் உயிர்கள்
சீவித் திருக்க லாமென்
றெவ்வா ரேயூ கித்தே
எழுதி யுள்ளார் சிலரே!
ஒவ்வா தெனினும் சிலராம்
ஒளிநூல் வல்லார் உயிர்கள்
இவ்வா றிருக்கு மென்றும்
இயம்பி யுள்ளார்! அறிவோம்! 123

எனினுமவ் வுயிர்கள் உள்ள
திவ்லையென் றுரைக்க முடியா
தினியமாங் கனிகள் முன்பு
எத்தனை இருந்த தினிமேல்
கனியவை கணக்கென் என்றே
காட்டுதற் கியலா ததுபோல்
மனிதனின் அறிவு ஏதோ
வரம்பினுக் குட்புட் டதுமாம்! 124

பூமியில் மட்டும் தானு
புத்துயிர்ப் படைப்பு? மற்ற
காமமில் கோடி யண்டம்
காமறிக் கிட்ட துண்டோ?
யாமெதும் சொல்ல இயலா!
யார்கண்டார்? இருக்கும்! இந்த
காமர்கல் வானத் தப்பால்
காண்பது யாது என்ருன் 125

அப்பால் மீன்கள் அதற்கும்
அப்பால் நெபுலப் படலம்!
அப்பால் சென்ருல்? சென்ருல்
அப்பப்பா அங்கும் வானம்!
முப்பால் வானம்; அங்கு
முழுவதுமே வானம்! இன்னும்
அப்பால் சென்ருல் அங்கே
அமைவது இருட்டா? ஒளியா? 126

வானமே பொருளா? அன்றி
வார்த்தைகள் விளக்க ஒண்ணுச்
சூனியந் தானு? அதுதான்
சுருதிகள் கூறும் பிரம்ம
ஞானமா? அன்றிச் சடத்தின்
சாஸ்வத மான நித்ய
மோனமா? நண்ப அந்த
முடிவினைக் காண விழைவேன்! 127

எல்லையைத் தொட்டு விடவே
ஏங்குமென் இதயம்! உலகத்
தொல்லைகள் என்னைத் தொட்டு
தொடரேல் என்றே இழுத்தும்
இல்லைநான் முன்னே செல்வேன்
என்றெதிர்த் தெழுந்தே இதயம்
அல்லையும் ஒளியும் காணு
அற்புத இடத்திற் கேகும்! 128

உயரவே பறந்து செலினும்
ஓர்மரக் கிளையின் கூட்டில்
துயிலவே வரும்புள் போலத்
துணைவ! என் மனப்புள் கூட
பயிலுமிவ் விடத்திற் கேயே
படர்தரும் பசிக்கும் வேளை!
அயிலுதற் கேக வேண்டும்
அடுத்தநாள் வருவேன் என்ருன்! 129

நிலவமு துண்டு வானில்
நீந்தியே முகிலூ டலைந்து
மலர்களைக் கண்டே இந்த
மனப்பசி யாற்ற லாகும்!
உலகினில் வயிற்றுப் பசிக்கும்
உதவுமோ சிந்தைச் சிறகு?
நலமுடன் வாழ உழைத்துண்
நல்வழிச் செல்வோம் என்றான் 130

இருவரும் பேசி விட்டு
எழுந்தனர் இல்லம் சென்றார்!
பருவவெண் ணிலவோ தனது
பாட்டினில் அமுது பொழியும்!
உருவங்கள் மறையும்! தோன்றும்!
உளத்திரை விரித்த வாறு
மருவும்வே றோர்நல் லிடத்தை
மன்னியே காணச் செல்வோம்! 131

வெண் மணற் பரப்பினூடே
விளையாட்டுச் சிறுவன் போல
உண்மகிழ் கள்ளை யுண்ட
உன்மத்தன் போல ஒருவன்
விண்மதி தன்னைக் கண்டு
வேட்கையால் மயங்கு கின்றான்
உண்மையி லிவனோர் பித்தன்
ஓடினான் நின்றான் ஈங்கே! 132

காதலில் தோற்ற தாலோ ?
கடும்பகை யுணர்ச்சி யலைகள்
மோதலில் விளைந்த தாலோ !
மூண்டெழும் மோக தாக
வேதனை யுற்ற தாலோ ?
விரும்பிய உறவு தன்னைச்
சாதலின் பிரிந்த தாலோ ?
சரித்திரம் குலைந்த தாலோ ? 133

பணவெறி கொண்ட தாலோ ?
பணம்பலி கொண்ட தாலோ ?
மணவினை முறிந்த தாலோ ?
மனமுடைந் தழிந்த தாலோ ?
குணமிலாச் சமூகம் எய்த
குறியம்பு பட்ட தாலோ ?
உணவுடை கிட்டா வறுமை
உற்றதால் வந்த தேயோ ? 134

எதுவா கினுமென் இவர்க்காய்
இரங்குவோர் எவரு மில்லை !
மதுமலர் கசக்கு வார்போல்
மனிதர்கள் இவர்தம் மனத்தை
கதுமெனக் கசக்கி விட்டார்
கழிவெனக் கருதி விட்டார்
இதுவொரு சாபக் கேடாம்
இறைவனின் படைப்பி லம்ம ! 135

உடல்வளம் சிறந்தும் அந்தோ!
உயிரிலாப் பிணமாய் உள்ளான்!
கடல்திரை யுலாவும் மணலின்
கரையினில் என்ன வேலை?
திடரினில் ஓடி யமர்ந்தான்
திசைகளை முற்றும் பார்த்தான்!
குடலினைப் பசிதான் கவ்வ
குறிக்கொளா திங்கே உள்ளான் 136

உலகமே வெறுத்துக் கேலி
உரைத்துமே நீக்கி விடலால்
நலமிலா உலகைத் தானும்
நம்பிக்கை யற்று வெறுத்தே
இலதொரு துணையென் றெண்ணி
இயங்குமிவ் வான மதியே
புலவிருந் தளிக்கும் துணையாய்ப்
புரிந்துதான் வந்தான் போலும்! 137

தனிமையை நாடி இன்பத்
தவிப்பினைத் தேடி வந்து
புனிதநன் னிலவாம் அமுதப்
புனலினில் குளிக்க வந்து
இனிமையின் துளிகள் சேர்த்து
இதயத்தேன் கூட்டை வார்க்க
மனிதருட் சிறந்த யோகி
மண்ணிடை வந்திங் குற்றான்! 138

பாசமும் இல்லை தீய
　　பணமதைத் தேடித் திரியும்
ஆசையும் இல்லை உறவாம்
　　ஆள்துணை யொன்று மில்லை!
பேசுவ தெல்லாம் உண்மை;
　　பேணுமிவ் வுடம்பின் பற்றும்
மாசுமே இல்லா இந்த
　　மருள்படு மனிதன், யோகி! 139

நிலவினைப் பார்த்து ஏதோ
　　நினைவுகள் தூண்ட அவனும்
பலபலப் பேசு கின்றான்!
　　பயனிலாச் சொற்கள் என்று
உலகமே கருது மேனும்
　　உணர்பவர்க் கவையும் வேத
நலனினும் சத்தி யத்தின்
　　நாட்டமே மிகுந்த வாக்காம் 140

ஏனடா! நிலவே உனக்கிங்
　　கென்னதான் வேலை! மீண்டும்
வானகத் தேனோ வந்தாய்!
　　வளர்ந்ததேன்! அந்தோ நீதான்
தினமாய்த் தேய்ந்து போவாய்!
　　தினமொரு கோலம் காட்டும்
ஈனமாம் பிறவி ஏனோ?
　　இனிச்சில நாளில் மாய்வாய்! 141

மாள்வது தெரிந்தும் இந்த
மனிதரைப் போல உவகை
ஆள்வது வேண்டித் தானே
ஆதவன் ஒளியைச் சேர்த்து
தாள்வலி யோடு வளர்ந்தாய் !
தாழ்வதை யுணர்ந்தும் மறந்தேன்
மீள்வதோ ? உயிர்கள் பிறவி
மேவிடும் உருளை போன்றாய் ! 142

எத்தனைக் கால மாக
இருக்கிறாய் என்னைப் போன்ற
பித்தர்கள் கோடி நீயும்
பேருல கிதனில் கண்டாய் !
அத்தனை பேரில் என்போல்
அவலமே யுற்றோ ரில்லை !
செத்திட வழிதா னின்றி
செகத்திலில் வாழு கின்றேன் ! 143

அன்பினைச் செலுத் தென்றார்கள்
ஆயிரம் உபதே சகர்கள்
முன்பிருந் தவர்கள் இற்றை
முனிவர்கள் எல்லாம் ! மூடர் !
அன்பினைச் சொரிந்த தாலே
ஆனதென் துயரக் காதை !
துன்பமே ! அன்பும் நீயும்
தொடருமோர் இரட்டைப் பிறவி 144

நின்னினும் தூய தாக
நேரிழை முகந்தான் தோன்றும்!
என்னினே அதற்கு வேறோர்
ஏதுவு முண்டாம்! அவர்கள்
மன்னிடும் களங்க மதனை
மனத்திலே ஒளித்து வைத்து
முன்னிலும் ஒளிரும் தூய
முகத்தினைக் காட்டு வாரே! 145

முகத்தினை நம்பி நானும்
மோசமே போனேன் அந்தோ
அகத்தினைக் காணு தவள்தன்
அழகினை மட்டும் கண்டேன்;
சகத்தினில் அவள்போல் ஒருத்தி
சரித்திரக் கதையி லன்றி
இகத்தினில் இல்லை யென்றே
இறுமாந்து கிடந்தேன் அடடா! 146

அன்பெலாம் கொட்டி வைத்தேன்
அன்னையை வெறுத்தேன்! தந்தை
முன்பிறந் தொழிந்த தாலே
மூர்க்கனாய் அவளை நச்சி
என்புலம் வீடெல் லாமே
எழுதினேன் அவள்பே ருக்கே!
பின்பழி வந்து சேரும்
பெற்றியை உணரே னந்தோ! 147

ஒருநாள் மாலைக் காட்சி
ஒருசினி மாவிற் கேகி
திருநாள் கூட்ட மாகித்
திரும்பினேன் சிட்டில் லாதே
வருவதை யோரா மடந்தை
மனங்கவர் இளைஞ னொருவன்
பொருதரக் கலவிப் போரில்
புரிநகை யோடே யிருந்தாள் ! 148

முத்தமிட் டிணைந்த இளைஞன்
முகமதில் பயந்தான் படர
சத்தமில் லாமல் வெளியே
சட்டெனச் சென்று விட்டான் !
பித்தமுற் றவனாய் யானே
பேசாமல் திகிலுற் றிருந்தேன் !
இத்தனை யுங்கண் ணுற்றும்
ஏந்திழை மெல்லச் சிரித்தாள் ! 149

சிரிப்பா ? அது ! அல்ல ! அல்ல
தீச்சுடர்க் கோளந் தன்னைப்
விரிப்பாய் போட்டு என்னை
விழ்த்திய தொத்த துடனே
நரிப்பய லோடா கூடி
நாடக மாடு கின்றாய் !
இருப்பதோ இனியும் என்றே
என்செய என்று திகைத்தேன் ! 150

கொல்வதோ? அன்றி ஏற்றுக்
கொள்வதா? உணர்ச்சி தன்னை
வெல்வதா? வீட்டை விட்டே
வெளியேற் றுவதா? நானே
செல்வதா? ஏதும் புரியாச்
சிந்தனைக் குழப்பம் தன்னில்
இல்லினை விட்டு வந்தேன்
ஏந்தியமை தேட வில்லை! 151

ரத்த நாளம் கொதிக்கும்!
ராட்சசி! தனது பேரில்
சொத்திருந் ததனால் அன்றோ
துரத்தியே விட்டாள்! நானோ
கத்தினேன்! இதயத் தோடு
கதவையும் மூடி விட்டாள்!
பித்தனென் றுலகம் என்னைப்
பேசிய தேசிற் றந்தோ! 152

முந்தைய சொத்தை அவள்பால்
மோகத்தால் எழுதி வைத்து
தந்தைதாய் இறந்த தாலே
தனியனாய் ஆகி இன்று
சிந்தைநோய் கொண்டு பித்தச்
சிறுவனாய்த் திரிந்தே உழல்வேன்!
விந்தையிவ் வுலகம்! என்னை
வேடிக்கை பார்த்துக் களிக்கும் 153

சொல்லெடுத் தெறிந்தார் பெரியர்
சோம்பேறி என்று வைதார்
கல்லெடுத் தெறிந்தார் சிறியார்
கனவிலே திரிந்தேன் யானும்!
இல்லெடுத் திட்ட பாவி
இராவணர் வாழு கின்றார்!
கல்லடுத் திலாஅ கலிகையின்
காலமே ஆயிற் றன்றோ 154

பித்தனாய் வாழ்ந்தென் கண்டேன்?
பேசாமல் இந்த மூரிக்
கத்துநற் கடலிற் பாய்ந்து
கவலைகள் எல்லாம் ஓய்ச்
செத்திடத் துணிந்து வந்தேன்!
சீவனை விடுமுன் மீண்டும்
முத்துறழ் நகையாள் அவள்தன்
முகத்தினைக் காண விழைவேன்! 155

என்னக் கேவல மனதிது?
என்னை வெறுத்துப் பிறர்தோள்கள்
பின்னப் புணர்ந்த சிறுக்கியின்
பின்னேன் மனது போவதுவோ?
தின்னச் சோறும் பாலமுதும்
தெவிட்டத் தரினும் நாயதுதான்
முன்னைக் குணத்தை விடாததுபோல்
முனைந்தென் மனமும் போவதுவே! 156

தற்கொலை புரிய முயன்றால்
சட்டத்தின் முன்னர்க் குற்றம்!
அற்புதமான சட் டம்!
அகப்படல் தோற்றோர் மட்டும்!
விற்பன மாக அதனில்
வென்றோர்க் கேது சட்டம்?
சொற்பன உலகம் என்று
சொல்லுவ துண்மை யப்பா! 157

நீலவான் நிலவே நீயே
நிகழ்த்து மோர் சாட்சியாக்கிக்
கோலமீன் கடலுட் போந்து
கொள்ளுவேன்! இந்த உலகைப்
போலவோர் உலகில் மீண்டும்
புகுந்துயிர் ஆவேன்! ஆங்கே
சாலவும் இன்பத் தோடு
சாஸ்வத மாக வாழ்வேன்! 158

ஆமாம் மீண்டும் வாழ்வதற்
காவிதா னுண்டோ? அன்றிப்
பூமியில் மண்ணுட் துகளாய்ப்
புதைவனோ? அன்றி வேறோர்
நாமமே பெற்று விட்டு
நலிவனோ? யாரிங் கறிவார்?
தாமத மிளியேன் இதேயோன்
தாவிடப் போகின் றேனே! 159

என்றிவை கூறி நின்ருன் !
ஏவரே யறிவார் ! பித்தர்
தன்றிற முணர்வோர் சொல்வர்
தண்மதி காணின் அவர்தம்
முன்றிறம் மிகுமாம் ! அதனுல்
முழுநிலாக் கண்டிப் பித்தன்
மின்றிகழ் நிலவூ டிங்கே
மேவினன் போலும் பாவம் ! 160

கடலிடைப் பாய்வான் போல
காலெடுத் திடுவான் ! அந்தோ
உடலினைத் துறக்கத் தானே
உறுகடற் கரைக்கு வந்தான் !
படலினை யடுத்தான் ! அங்கே
படுத்துக் கொண்டு விட்டான் ?
இடமிவ னுக்கு வேறு
எங்குமே இல்லை போலும் ? 161

மடமையால் நாம்தான் அவனை
மரணத்தைத் தழுவ வந்தான்
கடமைக ளுணராப் பித்தன் !
காமுகன் என்றே நினைத்தோம் !
இடமிலா திங்கே வந்து
இடர்க்கட லிடையே வீழ்ந்தான் !
படரவே நமது சொந்தப்
பயணமே தொடர்வோ மாக ! 162

இங்கொரு தோட்டத் திடையே
　　இருக்குமோர் வீடு ஊடு
தங்கிய மனிதன் யாரோ ?
　　தமிழ்தெரி கவிஞன் போலும்
பொங்கிய நிலவின் பத்தைப்
　　புலன்களின் விருந்தாய்ப் பருகி
கங்குலென் பதனை மறந்து
　　கண்விழித் திருக் கின்றானே 163

சொல்லெடுத் துவமை யாலே
　　சொக்கிடச் செய்யு மாறு
மெல்லவோர் கவிதை செய்ய
　　மேவியே பாவி னத்தில்
நல்லதோர் துள்ளல் சார்ந்த
　　நடையினைத் தேர்ந் தெடுத்து
வெல்லவே முயல்வான் போல
　　விம்மிதத் தோற்றம் கூறும் 164

வானினைக் கொணர்ந்தே இந்த
　　வையத்தில் நடவே வேண்டிக்
தானொரு கனவுச் சிறகால்
　　தாவியே செல்கின் றானோ?
பூனைக்கே இறகு முளைத்தால்
　　புள்ளினம் பிழைக்கு மாமோ?
மானிடர்க் கேனிவ் வாசை?
　　மனந்தரு மயக்க மன்றோ? 165

அழகினைக் காட்ட வேண்டி
அழகுறு சொல்லில் தனது
பழகிய அனுப வத்தைப்
பாத்திரப் படைப்பின் மூலம்
தழல்நிறத் தங்கத் தினிலே
தண்மணம் கொட்டி விடவே
உழலுமோர் மனத்த னாகி
உன்மத்த னானுன் போலும் 166

வேகாத பானை போன்ற
விளையாட்டுப் பொழுது போக்குக்
காகின்ற கவிதை சொல்லும்
ஆசிரி யனானே அல்ல!
சாகாத சொல்லி லிந்தச்
சமுதாய மாற்றந் தன்னை
ஏகாந்த மாகச் சிந்தித்
தினியநல் வழிகாண் பவனும்! 167

சமுதாய முடலுக் கொப்பாம்!
சால்பிடித் துழும்இடக் கை
அமையுமே விவசா யந்தான்!
அமைதரு வலக்கை தொழிலாம்!
இமைகளே மதமாம்! கண்கள்
எழில் விஞ்ஞான மாகும்!
நமையெல்லாம் ஆட்டு விக்கும்
நன்மூளை எழுத்துத் துறையாம் 168

குருதியே செல்வ மாகும்!
கொண்டுசெல் நரம்பின் கூட்டம்
மருவிய வாணி கந்தான்!
மானிடச் சமூக உடலின்
திருமவர் அழகே கவிதை!
தேசுறு தத்து வந்தான்
கருதிடு மான்மா வாகும்!
காவியப் பாங்கோ டமையும்! 169

உறுப்பிவை எல்லாம் சமமே!
உடலுறுப் பதனில் எதையும்
வெறுப்பது உண்டோ? அதுபோல்
விருப்புடன் சமமாய்க் கருதிப்
பொறுப்புடன் கடமை யாற்றிப்
புகழுடன் வாழ்ந்தால் அன்றிச்
சிறப்புறல் முடியா திந்தச்
சிந்தனை முதலில் வேண்டும்! 170

கப்பலில் எந்த மூலைக்
கடுகனைச் சிறிய ஓட்டை
தப்பவே விட்டால் அதுவே
தண்ணீரால் பெரிதாய் நீரும்
தெப்பமாய் விடும்பின் அதுவே
திடீரென மூழ்கும் இதனை
ஒப்பவே அமைந்த திந்த
உயர்சமு கந்தான் அறிவாய்! 171

முதலினிற் குறியாய் வட்டி
முதலையில் குறியாய் வாழும்
விதமிது நன்றன் றென்றும்
வேட்கையைக் குறைத்தல் வேண்டும்!
சதமிலா வாழ்வென் றறிந்தும்
சமத்துவம் நீத்தல் தீதாம்
முதலிலே பசியைப் போக்கும்
முன்னேற்ற வழிதான் வேண்டும் 172

அன்னமே உடவாம்! பசியை
ஆற்றலே பெரிய தருமம்
தன்னல மிக்கார் சிலரால்
தருமங்கள் கெடலால் அன்றே
கன்னமிட் டுண்பார் சிலரைக்
காண்கின்றோம்! சமமாய் வாழின்
சின்னவன் பெரியன் என்ற
சேதிகள் மறையு மன்றோ? 173

பசியினை ஆற்றல் வேண்டும்!
பாரினை மாற்றல் வேண்டும்!
நிசியினில் தூங்கா துழைக்கும்
நிலைமையை மாற்றி உழைப்போர்
சசிபெழிற் கோலம் காணும்
சரிநிலைத் தொழிற்பங் கீட்டில்
வசிக்கின்ற மக்க ளெல்லாம்
வளர்பகல் மட்டும் உழைப்போம்! 174

பகலிலே உழைப்போம்! இரவில்
படித்திடல், கலைகள் துய்த்தல்!
மகளிர்தம் எழில்பா ராட்டல்
மனமதன் ஓய்வாய்த் துயிலல்!
தகவுடன் அமைத லன்றித்
தறிகளில் நூற்பா லைகளில்
மிகவுறும் தொழில் செய்திரவில்
விழித்திடல் நோயாக் கிடுமே! 175

பண்ட மாற்றுப் பொருளின்
பரிவர்த் தனைக்காம் பணத்தைக்
கண்ட வுடனே அதனைக்
கடவு ளாகக் கருதித்
தொண்டு செய்யும் லோபம்
தொலைந்தா லன்றி மனிதன்
பண்டு போல அமைதி
பயத்தல் என்றும் இல்லை 176

நிலையற் றிடுமிவ் வுடலின்ப
நினைப்பில் மூழ்கி ஆன்மீகக்
கலையின் பங்கள், கருத்தின்பம்
கவிதை யின்பம், தத்துவத்தின்
விலையில் அமுதாம் பேரின்பம்
விழையா மூட மனிதர்க்குத்
தொலைவி லாத மனநோய்கள்
தொடர்த லென்ன வியப்பம்மா! 177

காலைச் சுடரின் ஒளிவெள்ளக்
காட்சி யின்பம்! நிலவூறும்
மாலை மதிய எழிற்கோலம்!
வான முகில்கள் சிதைந்துலவல்!
நீல நிறத்தோ டந்திச்செந்
நிறமும் கலந்து திசையெங்கும்
கோலங் கொள்ளும் இயற்கைத்தாய்
கொண்டு தருமிவ் வின்பங்கள் 178

காணத் தெரியா திவ்வுலகில்
காசு சேர்ப்ப தொன்றுமட்டும்
பேணத் தெரியும் பணத்தடிமைப்
பேய்கட் குண்டோ நிம்மதிதான்?
ஆணும் பெண்ணும் கூடிநிதம்
அன்பு செய்யும் இன்பமதும்
சேணுற் றோடுங்கத் தங்கமதைச்
சேர்த்தென் பயன்தான் பெற்றனரோ? 179

பிறர்க்கொன் றியார் சமுகத்தின்
பிறர்தம் உழைப்பால் வாழ்கின்ற
திறத்தை மறந்தார்! தம்முடைமை
தெய்வந் தந்த தெனநினைத்தும்
அறமொன் றியற்றார்! பொதுநோக்க
அறிவில் லார்கள்! இவர்தமது
மறத்தால் விளையும் துன்பங்கள்
மற்றும் பலவாம் என்னென்பாம் 180

பசித்தோர்க் கீயார்! பண்பாட்டைப்
பற்றிப் பேசிப் பலபுகழ்ந்தும்
கசியா உள்ளக் கஞ்சரிவர்
கடைசி நாளின் பயணத்தில்
புசித்தற் கென்ன கொண்டங்கே
போவா ரோயார் அறிந்திட்டார்?
நிசியும் பகலும் தூங்காது
நிதியம் காக்கும் பூதமிவர் 181

போதும் என்றே சொல்கின்ற
புனித தானம் ஒன்றுண்டேல்
தீதி லமுதாம் அன்னமொன்றே
தெரிக! நமது பெரியோர்கள்
ஆதா ரத்தோ டுரைத்திட்ட
அன்ன தான மகிமையுணர்ந்
தேதும் செய்யார்! பொய்யான
இந்த வாழ்வி லின்புண்டோ? 182

ஈந்தே யுவக்கும் இயல் றியா
இரக்க மில்லா அரக்கரிவர்
நீந்தும் ஏழை மக்கள்தம்
நெற்றி வியர்வை நீரிடையே
மாந்தர் குருதிக் கறைபடிந்த
மரணச் சுறவின் கோரப்பல்
காந்தும் ஒளியைக் காணுரோ?
கண்க ளிருந்தும் குருடாவார் 183

உலகில் மூன்றில் ஒருபாகம்
உள்ள மக்கட் தொகைதாமும்
கலக மற்ற சமாதானக்
காட்சி மிக்க கம்யூனில்
இலகிப் பொதுமை எனும்புதுமை
இலங்கு நெறியில் கலங்காமல்
கலமோ டரசான் வதனையேன்
நன்கு சிந்தித் துணராரோ? 184

உண்மை ஒன்றே என்றாலும்
உணரா தேஇவ் வுலகந்தான்
திண்மை கொண்ட முரண்நோக்கில்
திசைக்கொன் றாகத் திரிவதனால்
வன்மை வாய்மை எலாமிழந்து
வாய்ச்சொல் வீரம் காட்டுவதாய்
அண்மை நோக்கும் கருத்துகளை
அலசு வதிலும் ஆழ்ந்துள்ளார் ! 185

கருத்துப் போரில் மூழ்கியவர்
கடமை யாற்று துழல்கின்றார் !
பருத்திக் குவையில் தீப்பொறிபோல்
பழமை பேசிப் பிரிவினைகள்
அருத்தி யுடனே விளைவித்தே
அத்தோ டமையா தனல்பெருக்கும்
அடுத்தி போலப் பிரசாரச்
சொற்கோ வைகள் நிகழ்த்துகின்றார் 186

பழைய எல்லாச் சிந்தனைகள்
பாலாய் அமையச்சு தந்திரமாய்
விழையும் ஞான மத்தாலே
மேலாய்க் கடைந்த நவநீதம்
உழைய தாக, நெய்க்கேங்கி
உதவா மரபுச் சடங்குளாம்
முழையில் புகுந்தவ் விருட்டினிலே
முன்னே ருது திகைப்பானேன்? 187

இகமும் பரமும் இணைந்தொன்றாய்
இயல்பாம் வாழ்வில் இன்புறவே
தகவே வகுத்த தத்துவந்தான்
தனக்குத் தானே கண்டடைந்து
மிகவோர் குருவைத் தேடாமல்
மேலாம் மனச்சாட் சியின்வழியே
புகவே வேண்டும்! அவ்வழியே
பொதுமை வழியாய்ப் பொலிவுறுமே! 188

என்றிவ் வாறே ஏதேதோ
எழுந்த சிந்தை முந்துறவே
ஒன்றி யுலகம் உறங்குங்கால்
ஒருவன் தனித்தே உறங்காமல்
நன்றி மிக்க காவியத்தின்
நயங்கள் படைக்க விழைவானாய்
அன்றக் கவிஞன் இருந்தனனால்
அதுவே அவன்றன் தவமன்றோ? 189

உலகோர் தத்தம் நலம்வேட்டே
　　உழைத்துண் டுறங்க இவன்மட்டும்
நலமே உலகுக்காம்வகை யில்
　　நாளும் தனது குடும்பத்தில்
இலதோ உளதோ எண்ணுமல்
　　இல்லாட் குரிய பொறுப்பாக்கிப்
பலவும் நினைந்து தூங்காமல்
　　பண்பாட் டிற்கா யுழைக்கின்ருன் ! 190

மக்கள் அவனை மதிக்காமல்
　　மறந்தா ரேனும் மதியிதுவே
தக்க அவன்றன் சேவையினை
　　தரிசித் திடுமோ? நிலத்தினிலே
உக்க நிலவி னமுதத்தை
　　உலகோர் மதியா துறங்குங்கால்
மிக்க ஆர்வத் தோடிவனே
　　மேவிப் பருகும் விதம்போன்றே ! 191

மலரும் மதியும் மங்கையரும்
　　மதலை யுடனே மதிவல்லார்
நலமோ டியாத்த கவிதைகளும்
　　நன்கு துய்த்தே உலகத்தின்
புலருந் தகைய துன்பங்கள்
　　போக்கும், அமுதாய், வறுமைநோய்
அலரோ, டமைந்த இதழ்முதலாம்
　　அல்லல் நீக்கும் வழிகாண்பான் 192

கொள்ளை யின்பப் பெருநிலவை
கோதற் ருளிரும் ஒளியமுதை
பிள்ளை களுடன் கவிஞர்களும்
பித்தர் தாமும் துய்த்திடவும்!
கள்ளை வார்க்கும் இன்பநிலாக்
காணு துலகோர் இருக்கின்ருர்!
எள்ளை விட்டே நெய்க்காக
ஏனோ மணலைப் பிசைகின்ருர்? 193

தோலின் பத்தோடுறு நாக்கின்
சுவையின் பந்தான் தெரிந்திட்ட
ஞாலத் தோரே! செவியின்பம்
நாலா விதத்துக் கண்ணின்பம்
மேலும் சிந்தை தருமின்பம்
மேவா தொழியின் இப்பிறவி
ஏலும் பயனென் றுண்டேயோ?
ஏது மறியாப் பேதையரே! 194

நிலவைக் கண்டே உம்முடைய
நெஞ்ச மதுதான் நெகிழாதேல்
உலவும் தென்றற் கசைகொடிகண்
டுள்ள மதுதான் உருகாதேல்
மலர்கள் கண்டே உம்முடைய
மனந்தான் மெல்ல மயங்காதேல்
இலதோ யாதோர் பயனதுவும்
இந்தப் பிறவி எடுத்திருந்தும்! 195

வானில் நீந்தாப் பறவையில்லை!
வானம் பொழிந்த நீர்நீந்தா
மீனு மில்லை! என்ருலும்
மேலாம் மனித! நீமட்டும்
ஏனே அழகின் வெள்ளத்தில்
ஆழ்ந்து நீந்தா தந்தகனைக்
கானில் திரிந்து கெடுகின்ருய்!
கண்ட பிறவிப் பயனென்னே? 196

அழகென் ருேதும் தேன்வெள்ள
அமுதக் கடலில் நீந்தாமல்
பழகும் வாழ்க்கை முறைப்படியே
படிந்து பழக்க தோஷத்தால்
விழலுக் கிறைத்த நீராக
வீணே வாழ்க்கை கழிக்கின்ருய்
அழுவ தன்றி இவ்வுலகின்
ஆனந் தங்கள் அனுபவியாய்! 197

இதோபார்! இந்தச் செவ்வாம்பல்
இதழ்கள் விரித்து மலர்வெய்தி
மதோன்மத் தத்தை யடைந்ததுவாய்
மதியின் அமுதம் பருகுவதும்
உதார குணத்தோ டளிகட்கும்
உதவும் வள்ளல் ஆவதுவும்
சதாஇன் பத்தோ டிருப்பதுவும்
சற்றே கண்டே திருந்தாயோ? 198

நச்சு வலயச் சிக்கலிலே
நசுங்கிக் கிடக்கும் மாமனிதா?
இச்சைப் படியே திரிந்துலவி
எளிய உணவில் இன்புற்று
கச்சை யின்றிபட் டுடையின்
கவலே யின்றி வயிற்றுக்காய்ப்
பிச்சை கேட்கா தியல்பாகப்
பிழைக்கும் பறவை தனைப்பாராய்! 199

அறிவு பெற்று ஏனிந்த
ஆடம் பரத்தில் சிக்கிமிதில்
செறிவுற் றந்தோ மீண்டிடவே
தெரியா துழன்று கவல்கின்ருய்!
வெறிகொள் கள்ளைக் கொண்டாரீ
வேதனை தன்னை மறக்கின்ருய்!
சிறிதோர் எறும்பும் வாழ்நெறியின்
சேதி யுனக்குச் சொல்லிடுமே! 200

மரத் திற்கும்வேர் தானின்றி
மன்னும் இரண்டு காலிருந்தால்
சிரத்தை யோடே மாற்றத்தின்
சிலிர்ப்புக் கேற்ப நடந்துவிடும்!
உரத்த மனிதன் நீமட்டும்
உள்ள நிலைமை மாருமல்
திரத்தோ டிருக்க நினைக்கின்ருய்!
திரும்பிப் பாருன் சரித்திரமே! 201

தீமை கண்டு கால்கைகள்
சிறிய தலையோ டொடுக்கிவிடும்
ஆமை போல வாழாதே !
அதனை எதிர்த்துச் சிங்கம்போல்
தாம தந்தான் இல்லாமல்
தகர்த்தெ றிந்து மாற்றத்தின்
சேம வைப்பைக் காணாயோ?
செல்க ! முன்னே றிடுவாயே ! 202

இயற்கையை ஆரத் துய்த்தற்கு
இடையூறு யமைந்த வாழ்க்கைச்
செயற்கையாம் குறைகள் நீங்கி
செகமதில் அமைதி யுடனே
மயக்கம தின்றி எளிமை
மன்னுபே ரின்ப வாழ்வைத்
தயக்கமி லாதே கொண்டு
தனித்துயர்ந் திடுவா யாக ! 203

கற்பனைச் சிறகை விரித்துக்
கடந்து நாம்வந்த பாதை
அற்புதம் எனினும் மாறி
அல்வழி புகுந்து விட்டோம் !
புற்புத மனைய வாழ்வின்
புன்மையைப் புரிந்து கொண்ட
சிற்பர ஞான மிக்க
சித்தாந்தி யிவனைக் காண்போம் 204

வானத் தெளிநீர் தனைக்கலக்கி
வாகாய் மேகச் சேறுழக்கித்
தானே வந்த திக்காற்றே!
தண்வெண் மதியை முகில்மூட
மோன மடைந்து திரைவீழ
முன்னே கண்டே காட்சிகள்தாம்
போன தொத்திவ் வையந்தான்
புதிய தோற்றம் கொண்டதுவே! 205

ஞான மறைக்கும் பாசமென
ஞாலம் மறைக்கும் இருட்படலம்
ஆன காட்சி தனைக்கண்டேன்
அழகைப் புதிதோர் வண்ணத்தில்
தேனே டிணைந்த பாலென்னத்
திசைகள் மிளிரப் பார்த்தவனாய்
ஊன மடைந்து கற்பனைகள்
ஓடிய மயங்கி நின்றேன்யான்! 206

மண்ணைக் கீண்டு வெண்டுமுளைதான்
வையம் எட்டிப் பார்ப்பதுபோல்
கண்ணைக் கவரும் புத்தெழிலில்
கவினார் மதியும் புறத்துறவே
சுண்ணப் பொடியைப் பதமாக்கிச்
சொரிந்தாற் போல நிலவுதிர
வண்ணக் கோலம் முன்போல
வையம் கொண்ட தப்போதே! 207

புதிதோ ரறிவு நூலினையே
புரிந்து படித்தின் புற்றாற்போல்
மதியைக் கண்ட மனமதுவே
மகிழ்ச்சிக் கடலில் திளைத்திடலால்
இதுவே சொர்க்க இன்பமென
எண்ண அலைகள் பாய்ந்தாட
நதிவெள் ளத்தே குடைந்தாடும்
நாளின் _பத்தில் மிதந்தனனே! 208

தூண்டும் விளக்காய் மதியொளிரத்
துய்த்த வாறு மென்மெலவே
மீண்டும் நமது பயணத்தை
மேவு வோம்என் னுடன்வாரீர்!
காண்டற் கினிய மதிதன்னைக்
காணு தறையி லுள்மனிதன்
வேண்டும் இன்பம் யாதேயோ!
மெல்ல எட்டிப் பார்ப்போமே! 209

வாழை யுட்தண் டொத்தமைந்த
வண்ண இரச விளக்கொளியில்
சூழ உள்ள நூற்குவையின்
சுவைதேர்ந் துண்ணும் அறிவின்பத்
தாழும் இந்த தத்துவத்தின்
அருமைக் குழந்தை யாம்முதியோன்
பாழும் உலகை மறந்தேயப்
பாலுக் கப்பால் தேடுகிறான்? 210

நூற்றின் விரிந்த நீராக்க
    ● நுண்மைப் பொருளாம் ஈரணுவின்
மேற்றே தொடங்கிச் சூரியனில்
    மேலாம் ஹீலி யம்நான்காய்
தோற்றும் தங்கத் தீரெட்டியாய்த்
    தொடர்ந்திய் பாரின் இடம்நிறைக்கும்
ஆற்றல் சான்ற பொருண்மையின்
    அமைப்புத் தன்னை ஆராய்வான்! 211

உருவப் பொருளாய் இயக்கமுறும்
    ஒளிமின் காந்தம் வெப்பமெனும்
பருமப் பொருளாய் மாற்றமுறும்
    பாரை ஆக்கும் பொருளிதுதான்
கருதும் எண்ணம் என்பதற்கும்
    கார ணந்தான் ஆயதுவோ?
அரிதின் வேறோர் தனித்தன்மை
    ஆன்மப் பொருளோ? ஆய்கின்றான்! 212

தூய உருவற் றின்பத்தை
    துய்க்கும் தன்மை பெற்றதுவாய்
மாயப் பொருளு டேகலந்து
    மன்னும் பாலும் நீரும்போல்
தோயக் கிடந்திவ் வுலகத்தின்
    தோற்றத் திற்கோர் காரணமாய்
ஆய தான்மாத் தனிப்பொருளை
    அறிவென் பதனை ஆய்கின்றான் 213

● நீராக்கநுண்பொருள். ஹைட்ரஜன் - ஈரணு
ஹீலியம் - நான்கணு. தங்கம் - பதினாறு அணு

தன்னைத் தானே காண்பதுவும்
தன்னைத் தானே துய்த்திடலும்
முன்னின் றுயின் எப்போதும்
முடியா ததனுல் பொருவினையே
துன்னித் துய்க்கும் முரண்பட்ட
தூய ஆன்மா வேறுளதாம்
என்னின் அதுவே முதன்மைத்தாம்
என்னும் ஆய்வை ஆய்கின்ருன் 214

அசையாப் பொருளைக் கலந்துள்ள
ஆன்மப் பொருளே அசைவித்து
விசையா யியங்கி புல்முதலாம்
விளைவா யாகி வினையாற்றித்
தசையும் எலும்பும் குருதியுங்கொள்
தக்க விலங்காம் பிறப்பெடுத்தெத்
திசையும் பரவிக் கிடக்கின்ற
தெய்வ நியதி ஆய்கின்ருன் 215

சடமாம் பொருளோ இயங்காது!
சன்மத் துயர்கள் படுதற்கோ
ரிடமாம் உடலை விழைந்ததுவாய்
இந்த ஆன்மா சேராது!
கடவு ளென்னும் மூன்றாமோர்
கார ணந்தான் வேண்டுமிதன்
தொடர்புக் கென்னும் தத்துவத்தின்
சூழ்ச்சி தன்னை ஆய்கின்ருன்! 216

ஒளிசேர் உயிருல கிறையென்னும்
ஒன்றுக் கொன்று முரணாகி
விளியா தென்றும் இருக்கின்ற
விந்தை யாய முப்பொருளும்
தெளியின் ஒன்றே தானேயோ?
தேடின் இரண்டே யாமாறே?
வளிசூழ் ஞாலத் தோற்றந்தான்
மாயை தானே? உள்பொருளோ? 217

ஆவி யுருவில் கிடந்ததுவே
அசைந்து நீராய் அலைந்தாடி
மேவும் பனிக்கட் டியுமாக்கும்!
மேலாம் இறைமை உயிருலகாம்!
பூவும் மணமும் போலமையும்!
புரிந்து கொள்ளின் இரண்டில்லை!
தேவாம் பிரம்மம் அதுவன்றி
தேரின் வேறென் றிங்கில்லை! 218

கலத்திற் கேற்ப நீருருவம்
காட்டிற் றேனும் நீரொன்றே!
புலத்தின் உருவாம் உயிரென்னும்
புள்தான் அமைந்த கூடாய
நலத்தின் மிக்க உடல்கள்தாம்
நாடின் வேறும்! உள்ளாற்றல்
நிலத்தின் மேவி செடிகொடியாய்
நெருங்கி மேவல் காண்கின்றோம்! 219

தாவ ரங்கள் பொருளுயிர்கள்
தந்த கலப்பின் மயக்கன்றோ ?
மேவு மதனை யுண்டன்றோ
விலங்கும் புள்ளும் உயிர்வாழும் !
சாவும்பிறப்பும் நிகழ் மனித
சாதி கூட அதுவாகும் !
மாவும் புள்ளும் மனிதருமே
மற்றப் பொருளின் மயக்கன்றோ ! 220

பொருள்தான் ஒன்றே யாமாயின்
புரியும் சடமா ? ஆன்மாவா ?
தெருளோ டோதின் இவ்விரண்டின்
தெய்வ நியதிக் கலப்பதுவோ ?
மருளை நீக்கி ஆராய்ந்து
மற்றவ் விரண்டு மட்டுமோ ?
உருளை போல எண்ணங்கள்
ஓடி ஓடிச் சுழன்றிடுமே ! 221

ஆணும் பெண்ணும் ஆயதுவும்
அவர்தம் புணர்வில் பிறப்புக்கள்
பேணும் விந்தை நிலையதுவும்
பேசற் கரிய உண்மைகளைக்
காணும் ஆர்வம் மீதூர
கார்வா னத்தில் மின்னலொளி
பூணும் தன்மை போலவனும்
புலமை மின்னல் பொழிகின்றான் ! 222

கடலின் துளிகள் கணக்கிடவும்
　　ககன மீன்கள் கணக்கிடலும்
உடலும் உயிரும் இயங்குகிற
　　உண்மை நிலைகள் கணக்கிடலும்
இடமும் கால மென்பதுவும்
　　எல்லை காண முற்படலும்
சடமோ டுயிரின் மெய்ப்பொருளின்
　　தன்மை காண லோடொக்கும் 223

நெற்றி வேர்வை நிலத்துதிர
　　நெல்லுக் குழுத உழவன்தான்
முற்றி விளைந்த கதிர்கண்டு
　　முறுவல் பூக்கும் நிலைபோல
சுற்றி யுள்ள உலகத்தின்
　　தூய நிலைகள் ஆய்ந்துணர்ந்து
வெற்றி தோல்வி கருதாத
　　வீரன் ஆகி மகிழ்கின்றான்! 224

கருத்து முதலா?பொருள் முதலா?
　　கலந்து கிடக்கும் ஓர்நிலையா?
உருத்தோற் றங்கள் கற்பனையா?
　　உண்மை நிலையா? என்றெல்லாம்
வருத்தி ஆய்ந்து முன்னோர்கள்
　　வகுத்த நெறிகள் தொகுத்தாய்ந்து
பொருத்த முடனே தத்துவத்திற்
　　புனருத் தார ணம்செய்வான் 225

தத்துவ மேதை யிவனே
தருக்க நெறியி லாய்ந்து
வித்தக நூலொன் றெழுத
விழைந்திங் கிருப்பான்! இவனுக்
கித்தரை வழங்கும் பரிசொன்
றில்லையென் றாலும் புகழாம்
முத்துக்கள் கிடைக்கு மென்றே
முதுஞான முன்னீர் மூழ்கும்! 226

சுத்தசை தன்யத் தினைஉயிர்த்
தொடர்பொடும் ஆயும் இந்தத்
தத்துவ ஞானி இருக்கத்
தண்மதி தன்னைத் தொடர்ந்து
இத்தினம் நாமும் செல்வோம்
இந்த விசாரம் எல்லாம்
மெத்தவும் படித்தார்க் கன்றி
மேவுமோ நமக்கிந் நாளே 227

நிலவெ ழுந்துலவி வான
நீள்பரப் பெல்லாம் துழாவி
பலவுருத் தாங்கிச் செல்லும்
பனிமுகில் கூடு நீங்கிச்
செலவுறு புள்ளே போல
செல்திசை மேற்கு நோக்கி
நலமுடன் நகர்ந்து போகும்
நளினத்தை என்னென் றுரைப்பாம் 228

கிட்டும் பொருளை வேண்டாது
கிட்டாப் பொருளைத் தேடுகிற
மட்ட மான மனதுடைய
மனிதன் யானே சிறகின்றி
எட்ட இருந்தும் உன்றனையே
எட்டிப் பிடித்துத் தைவரவே
தொட்டு விடவே துடிக்கின்றேன்!
தூர விலகி ஓடுவதேன்! 229

கட்சி பிளவுச் சண்டைகளால்
கருத்து மோதல் சண்டைகளால்
லட்சி யந்தான் கிட்டாது
எட்ட விலகிச் செல்வதுபோல்
பட்சம் வகியா முழுநிலவே!
பரந்த வானில் ஓடுவதேன்
தட்ச ணத்தே உன்றனையே
தாவிப் பிடிக்க வருகிறேன் 230

நேற்றி ருந்த நிலைமறந்தாய்!
நெருங்கி நாளை நீதேயும்
மாற்ற மதனை மதியாமல்
மதியே! இற்றைப் பொழுதிருக்கும்
ஆற்றல் தன்னை சதமென்று
அகம்பா வத்தோ டலைகிறாய்! என்
கூற்றை மதித்து மரக்கிளையில்
கொஞ்ச நேரம் நில்லாயோ? 231

தென்னை யோலை யூடுன்னைத்
தேடிக் கண்ட போதிரும்புச்
சன்னற் கம்பி களிடையே
சற்றே மறைந்து கன்னியர்தாம்
என்னைப் பார்ப்ப தொத்திருந்தாய்!
இதயம் காத லூற்றெடுப்ப
உன்னைப் பார்த்தேன்! என்னுள்ளம்
உன்மத் தத்தில் உருகியதே! 232

கோடி வான மீன்மலர்கள்
கொட்டிக் கிடக்கும் மன்மதனுர்
தேடி உன்னைத் தான்பெற்று
தெய்வ வான வில்லெடுத்து
நாடி யுலகை மலரம்பாய்
நகைத்த வாறே எறிந்ததனல்
வாடி நின்ற உலகிதனில்
மகிழ்ச்சிக் காதல் பூத்ததுவோ? 233

திரண்ட செல்வம் தன்னைத்தேடித்
தேடிப் பஞ்சு மெத்தையிலே
புரண்டு புரண்டு தூக்கமிலாப்
பொழுதைக் கழிக்க முடியாத
வரண்ட பாலை வாழ்வதனின்
வளமார் சோலை போலுமுன
திருண்ட தெல்லாம் ஒளியாக்கும்
இரசவா தங்காண் வாழ்வினிதே! 234

தினமும் தின்று படுத்துறங்கிச்
சிறிது சிரித்துப் பெரிதழுது
மனது சலித்து விட்டஇம்
மாண்பில் லாத வாழ்வினையே
கனவென் றொதுக்கிக் கற்பனையாம்
காதற் சிறகால் வானூர்ந்தே
உனது பக்கம் வரவேண்டி
உயரப் பறக்க விழைகின்றேன்! 235

ஒரேஒ ரிதய மேமெனை
உள்ளன் போடு நேசிக்காது!
தோரேஒ ராளா கினுமென்னை
உள்ள படியே புரியவில்லை!
தரா விட்டாலும் என்னன்பைத்
தரும்போ தேற்போர் யாருமிலை!
இராவின் கனியே! நீமட்டும்
இதயம் தந்தும் ஏற்கின்றாய்! 236

உனதன் பன்றே நிலவாகி
உடலம் நனைத்து உளம்நனைத்து
வனமும் கடலும் மலையுமெலாம்
வாரிப் பொழியும் அமுதூற்றாய்
கனவோ? கடவுள் அருள்தானோ
கனவிற் பூத்த கற்பனையோ?
எனவே வியக்கச் செய்கின்றாய்!
இதயத் தின்பக் கடல்நிறைத்தாய்! 237

போட்டி பொறுமை வஞ்சகங்கள்
புலம்பல் பொய்கள் போர்முதலாம்
ஏட்டி லடங்காத் தீநஞ்சால்
எரியும் என்றன் இதயத்தைப்
பூட்டி வைத்த முத்துகளைப்
பொக்கென் றுதிர்த்து விட்டாற்போற்
காட்டி கவலை களைஓட்டிக்
களிப்பாம் அமுதால் குளிர்வித்தாய்! 238

முல்லை மல்லிகை வெண்மலர்கள்
மூல அணுக்க ளாய்ப்பிரிந்து
மெல்ல என்னைத் தழுவியதோ?
மேவும் நிலவுக் கதிராலே
புல்லி அணைத்தே என்றனது
புலம்ப லெல்லாம் போக்குகின்ற
அல்லி மலரின் காதலனே!
அருகே வரவே விழைகின்றேன் 239

சாவின் விளிம்பில் சஞ்சலித்துச்
சரிந்து கிடக்கும் வேளையிலும்
பூவின் மென்மை பொருந்துமுன்
புனித சோபை கண்டுவிட்டால்
ஆவி மீண்டும் வாராதோ?
ஆனந் தத்தேன் பொழியாதோ?
மேவி யுன்பால் வருதற்காய்
மேலாம் வழியொன் றுய்கின்றேன் 240

கருப்பஞ் சாற்றைக் கனல்மூட்டிக்
கட்டி யாக்கி வைத்தாற்போல்
விருப்போ டமுதச் சாற்றினையே
விண்ணில் மிதக்கும் கதிர்என்னும்
நெருப்பி லிட்டுக் கட்டியாக்கி
நிலாவென் றுரைத்து விட்டார்கள்!
இருப்ப தந்த வானத்தே!
இல்லா விட்டால் விடுவேனோ? 241

நெற்சோற் றுடனே கறிவகையும்
நெய்யும் தயிரும் உண்டாலும்
பொற்பா ரில்லம் பூமெத்தை
பூவை தழுவ லமைந்தாலும்
கற்கா லத்து மனிதன்போல்
காதல் வெறியா லுனேக்காண்பேன்
அற்ப மாய புலன்கடந்த
ஆத்மா வின்அன் பாமன்றோ? 242

மண்ணில் குழந்தை முகமதுவும்
மலர்கள் தாமும் காணுங்கால்
விண்ணில் மதியைக் காண்இன்பம்
வினையும் களங்க மிலாமனத்தால்
எண்ணம் பொலியும் என்றாலும்
ஏனோ இதயம் மாசுற்றுப்
பெண்ணைக் காணும் போதந்தோ
பேத லித்து விடுமாறே! 243

மூலப் பொருளின் வெளிப்பாடே
முன்னீர்க் கடலும் மலைமுகடும்
கோல மலரும் பெண்முகமும்
கோதிலமுத வெண் மதியும்
சாலத் துய்க்கும் யானுமெனச்
சாத்தி ரத்தாற் தேர்ந்தாலும்
ஏலக் குழலார் தமைமட்டும்
ஏனோ உள்ளம் ஈர்ப்பதுவோ ! 244

உண்மை யிதுதான் வெண்மதியே
உன்போ லவர்தம் முகமடைந்து
மண்மீ திருக்கப் பெற்றிட்ட
மாண்பே யன்றி வேறென்ன ?
விண்மீ தின்றி கைக்கெட்டும்
வீதி தன்னில் நீயிருந்தால்
கண்க ளாரக் காண்பதுவோ ?
கையாற் பிசைந்து பாரேமோ ? 245

வான மகளின் மார்பணிந்த
வைரப் பதக்கம் போல்கின்றாய் !
யானைத் தந்தம் போன்றமைந்து
யாவர் கண்ணுக் கும்மினிதாய்
மோன மாக நீபேசும்
மொழியே கவிதை யாமன்றோ !
ஏனோ இந்தக் கவிதைகளின்
ஏற்ற பொருள்தான் புரிவதிலை ! 246

சடசை தன்யக் கலப்பினிலே
சகல உலகும் தோன்றிடினும்
உடலோ டுள்ளம் குளிர்வித்தே
உன்போ லழியா தென்றென்றும்
இடமெங் கணுமே மகிழ்விக்கும்
இனிய பொருள்வே றென்றில்லை !
அடடா ! அதனுல் தானுன்னை
அகல்வான் தன்னில் வைத்தனரோ ! 247

தூய வானிற் திகழமுதத்
தோய மாய நிலவுமிழ்ந்து
தேய நிற்கும் முழுமதியே !
சாயை ஒன்றும் நானென்றும்
நீயு மாக மூவருமே
மேய தனிமைப் பேரின்பம்
ஆயின் வேறெங் குளதம்மா !
தாயின் அன்பைத் தவிர்த்திங்கே ! 248

சோலை மலர்கள் உனைக்கண்டு
சொக்கி நிற்கும் மணல்வெளியாம்
பாலை கனிலும் மதுவூறும்!
பார்க்கு மிடமெல் லாம்உனது
காலும் ஒளிவெள் ளம்பாய்ந்தெக்
காலும் குளிர்ந்து கிடக்கின்ற
மூலக் கடலா ழம்போல
முன்னென் மனதும் குளிர்ந்திடுமே ! 249

இமய மலையின் உச்சியிலே
இருக்கின் றாற்போல் ஒருணர்வே
அமையும்! கங்கை நதிநீரின்
ஆழத் துள்ள மீனாகித்
தமைம றந்த பேரின்பத்
தவிப்பில் மிதக்கும் என்னுள்ளம்!
அமைதி யின்பும் அழகின்பும்
ஆர்ந்த நிலவே! வாழியரோ





மைதாஸ்

மைதாஸ்

பொன்னைப் பெரிதென் றுழலும்
　　　புன்மை நெஞ்சங் கொண்ட
மன்னன் மைதாஸ் என்போன்
　　　மனதில் ஆசைப் பேய்க்கு
மன்னு மிடம ளித்து
　　　மனநிறை வென்ப தின்றி
சின்னுள் வாழ்ந்து செத்த
　　　செய்தி தன்னைச் சொல்வாம் 1

மடியாப் புகழ்மி குந்த
　　　மாண்பார் கிரேக்க நாட்டில்
ஸிடியா என்னும் நகரின்
　　　தகவார் மன்ன ருக
படியா தமைந்த மைதாஸ்
　　　பணமே பெரிதென் றெண்ணி
விடியா தெழுந்த உடனே
　　　விரைந்து பொன்னைத் தொழுவான் 2

சிந்தை முழுதும் புன்மைச்
　　　செம்பொன் மேலே வைத்து
மைந்தர் தமையும் மதியான்
　　　மனைவி தனையும் கருதான்
எந்த நேர மும்தன்
　　　இதயந் தன்னிற் பொன்னை
வந்த னைகள் செய்தே
　　　வாழ்த்தி வாழ்த்தி மகிழ்வான் 3

பொன்னைப் பெற்றால் இந்தப்
புவியின் இன்பம் எல்லாம்
தன்னை யடையு மென்று
தருக்கிச் செருக்கி னாலே
வன்னச் செம்பொற் கட்டி
மலைபோல் குவித்து வைத்து
தின்னற் குதவா தேனும்
தினமும் கண்டு மகிழ்வான் 4

மாயப் பொன்மேல் தனது
மனதைப் பறிகொ டுத்தே
நேய மழிந்தான் அந்தோ!
நெஞ்சம் நெகிழாக் கஞ்சன்!
தூய அன்பே இன்பம்
துய்த்தற் குதவும் என்னும்
மேய வாய்மை மறந்தான்:
மேன்மை பலவு மிழந்தான் 5

இயற்கை தருநல் லின்பம்
இதயந் தன்னில் ஓரான்
கயற்கண் நங்கை மார்தம்
காத லின்பும் கருதான்
மயக்கும் மழலைச் சொல்லின்
மாண்பார் இன்பம் மதியான்
செயற்கைப் பொன்னைக் கண்டே
சிரித்துச் சிரித்து மகிழ்வான் 6

கணந்தொறும் பொன்னைச் சேர்க்கும்
        கவலையால் மெலிவா னன்றி
மணந்தரு நெய்பா லன்னம்
        மகிழ்வுட னுண்ண மாட்டான்
குணந்தரு மமைதி யின்றிக்
        குலைந்தனன்! மாயைப் பேயாம்
பணந்தனில் மனது வைத்த
        பாவிகட் குண்டோ இன்பம்? 7

வருந்துவார்க் கிரங்கி ஈயான்!
        மனதாரத் தானும் துவ்வான்!
பொருந்திய பொன்னின் ஒளிதன்
        புலமிகு கண்கட் கினிய
விருந்திட மகிழ்வ தன்றி
        வேறொரு மகிழ்ச்சி கொள்ளான்
மருந்திலா மனநோய் கொண்டு
        வறியவன் போன்றே வாழ்ந்தான் 8

தென்றலின் இனிமை தேரான்
        திங்களின் நிலவும் பாரான்
பொன்றிரண் டனைய வெயிலின்
        பொற்பினைக் காண மாட்டான்
குன்றினைப் போலத் தங்கம்
        குவித்திட வேண்டு மென்னும்
ஒன்றினைத் தவிர மற்ற
        தொழிந்தனன் இழிந்த நெஞ்சான் 9

உண்ணுதற் கமைந்த செல்வம்
உற்றிடிற் போது மென்றே
எண்ணிடா துழலு கின்ற
எளியவன் ஒருநா ளிரவில்
கண்ணுறங் காமல் தனது
கனகமா நிதியம் கண்டே
உண்ணெகிழ்ந் துயிர்த்தோ னாகி
உலவிய படியே நின்றான் 10

பொற்குவை கண்டு மனதிற்
புழுங்கிய வாறே "ஈசன்"
அற்பமாய் எனக்கிச் செல்வம்
அளித்தன னன்றி என்றனன்
சொற்பமாம் ஆசை தீர
சோதிநற் பொன்னைத் தாரான்!
நற்பயன் இல்லா தொழிந்தேன்
நானென முணுமு ணுத்தான் 11

முயல்பவர் தமது குறிக்கோள்
முடிவுறு காறும் சிறிதும்
அயர்வுறா ரதனால் யானும்
அகிலத்துப் பொன்னெல் லாமே
இயல்வகை முயன்று சேர்த்தென்
இதயத்தின் ஆசைத் தீயை
மயல்கெட அவிப்பேன் இன்றேல்
மடிந்திடல் மேலாம் என்றான் 12

தேவனே! உலகைப் படைத்த
தெய்வமே! ஈசா! இந்தப்
பாவியேற் கிரங்கி டாயோ?
பாரினும் புதைந்து கிடைக்கும்
ஆவிநேர் பொன்னைத் தோன்டி
அளித்திடிற் குறைவுண்டாமோ?
சீவியம் முழுவதும் உன்னைச்
சிந்தனை செய்யவே னன்றோ? 13

உயிரினும் இனிய பொன்னை
ஒருவர்க்கு முதவா வகையில்
செயிர்பட மண்ணிற் புதைத்த
செய்கை என்னென்று ரைப்பேன்
வயிறது காய்ந்து பசியால்
வாடுமோர் ஏழைக் குதவாப்
பயிரினைப் போல வன்றோ
பசும்பொனைப் புதைத்து வைத்தாய்? 14

ஏழைபா லிரக்கம் கொண்டே
இறைவநீ எபான்னின் குவையோ
சூழமென் இதயம் களிப்ப
துரிதமா யளிப்பாக!
ஆழிசூ முலகத் துள்ளோர்
அனைவரும் வியக்கு மாறு
வாழவே எனக்குத் தங்கம்
வாரியே வழங்க வேண்டும். 15

என்றிவை கூறி மைதாஸ்
இறைவனை இறைஞ்சும் போது
மின்றிரண் டனைய சோதி
மேவிட ஆவி யுருவில்
வென்றிகொள் தேவ தூதன்
வியப்புற முன்னர்த் தோன்றி
கன்றிய மனத்தோன் கண்கள்
களிப்புறக் காட்சி தந்தான் 16

பொன்னின்மேல் பேரா சையால்
புழுங்கிய மனத்த னாகி
மன்னரி துதித்த தற்கு
மகிழ்ந்தனன் தேவ தேவன்!
என்னவேண் டும்சொல்! உன்றன்
இதயம் அலர ஈவேன்
முன்னிய வரங்கள் கேட்பின்
முழுதும்யான் தருவேன் என்றான் 17

என்றலும் உவகைக் கடலில்
இழிந்தவன் இதயம் விம்ம
ஒன்றுமே தோன்றா தவனாய்
உரைக்கவு மியலா தவனாய்
என்றுமே காணா இன்பம்
இதயத்திற் பொங்கிப் புரள
நன்றெனச் சொல்லிச் சொல்லி
நக்கனன் முறுவ லோடே 18

மட்டிலா மகிழ்ச்சிக் கடலில்
மனமது துள்ள மன்னன்
பட்டென ஆரா யாமல்
பதிலிது சொல்ல லானுன்!
எட்டிய பொருள்கள் யாவும்
என்னிரு கையாற் பற்றித்
தொட்டிடின் அவைகள் பொன்னுய்த்
தோன்றிட வேண்டும் என்முன் 19

வரமிது நல்கி னேன்யான்!
வாழ்கநீ என்று வாழ்த்தி
அரசனை வியப்பி லாழ்த்தி
ஆண்டவன் தூதன் மறைய
கரமதை நோக்கி நோக்கிக்
களிப்புடன் எதிரே யுள்ள
மரமதால் இழைத்த சிற்பம்
மன்னனும் மகிழ்ந்து தொட்டான் 20

தொட்டதும் இருளிற் கிடந்து
துலங்குறப் பொருள்தான் ஒளிமேற்
பட்டதும் ஒளிரல் போன்று
பளிச்செனப் பொன்னுய் மாறி
விட்டதும் மன்னன் கண்டு
வியப்பதும் மகிழ்ச்சி தானும்
கட்டவிழ்த் தோடும் நதிபோல்
கரைபுரண் டோட நின்முன் 21

அற்புத உணர்ச்சி பொங்க
ஆனந்த வெள்ளம் பாய
கற்சிலை ஒன்றைத் தொட்டான்
கனகமாய் பொலிந்த அந்தப்
பொற்சிலை தன்னைத் தழுவி
புதுமது வுண்ட வன்போல்
அற்பனாய் நாட்டி யங்கன்
ஆடினான் பாட லானான் 22

மகிழ்ச்சியால் நிலைகொள் ளாமல்
மதுவிரி பூங்கா வேகி
இகழ்ச்சியால் அன்ற லர்ந்த
இதழ்விரி பூவொன் றெடுத்தான்
நெகிழ்ச்சியாய் மதுவார் பூவும்
நிலைதிரி பொன்னாய் மாறப்
புகழ்ச்சியில் மனிதன் செல்வம்
போலவே பொலிந்த தன்றே 23

மணமிலாப் பொற்பூ வதனை
மதுவிலா தொழிந்த தேனும்
குணமிகப் போற்றித் தன்னுட்
குதூகல மடைந்தான் பின்னும்
பணவெறி கொண்ட பித்தன்
பார்த்திடும் பொருளை யெல்லாம்
கணமதும் யோசி யாமல்
கனகமாய் மாற்றிக் கொண்டான் 24

ஆசனம் தன்னைத் தொட்டான்
அணிகளைப் புதுக்கத் தொட்டான்
மாசிலா உடைகள் தொட்டான்
மற்றுள யாவும் தொட்டான்
தேசுறும் பொன்னாக் கிடவே
தேடியே எல்லாம் தொட்டான்
வீசிடும் காற்றை யன்றி
வேறுள யாவும் தொட்டான் 25

நறுங்கனி ஒன்றைத் தொட்டான்
நல்லொளி வீசும் பொன்னாய்
மருங்கினிற் கிடப்பக் கண்டே
மகிழ்ந்தன னன்றி யஃதே
உறங்கியோன் கனவு போல
உதவாத தென்ப தோரான்
மறங்கிளர் மாயைப் பேயின்
வலையினுட் பட்ட ழிந்தான் 26

குலையுறும் திராட்சைக் கொத்தைக்
குறித்தவ னெடுத்த லோடும்
மலைவுறப் பொன்னாய் மாற
மகிழ்ந்தன னன்றி யந்தோ
விலையிலா சுவையும் இன்பும்
விளிந்ததென் றோரா நெஞ்சன்
நிலையிலா தங்கு மிங்கும்
நெட்டுயிர்ப் பமரச் சென்றான் 27

சித்திரப் பதுமை தன்னிற்
சேயிழை யின்பம் தேடும்
பித்தரின் அவனும் பொன்னில்
பேரின்பம் உண்டென் றெண்ணி
மத்தக யானை போல
வந்தது போன தெல்லாம்
நத்தியே தொட்டுத் தொட்டு
நாசத்தின் எல்லை கண்டான் 28

கானல்நீர் தேடும் மான்போல்
கனகத்தில் இன்பம் தேடி
வானமு தத்தைத் தள்ளி
வளர்கடு நஞ்சைக் கொள்ளும்
ஈனன்போல் அவனும் அங்கே
இருந்ததெல் லாமே தொட்டுத்
தேனமர் பாத்தி ரத்தை
செயலறி யாதே தொட்டான் 29

மதுவமர் பாத்திரம் போல்
மதுவுமே பொன்னின் குழம்பாய்
கதுமென மாறக் கண்டு
களித்தவன் உடனே தன்னுள்
இதுதக வாமோ என்றோர்
எண்ணமாம் மின்னல் வெட்ட
புதிதுறு முணர்வி னாலே
புத்தியே கலங்கி நின்றான் 30

அத்துணை யளவில் வந்த
அன்புறு மகள்தான் 'தந்தாய்'
எத்திசை நோக்கி னாலும்
எழில்தவழ் பொன்னின் ஈட்டம்
ஒத்துள மாய மென்னென்
றுரைத்திட மன்னன் அன்பால்
சித்தம துருகத் தனது
சிறுமகள் தன்னைத் தழுவி
முத்தமிட் டினிது நோக்க
முழுச்சிலை யொன்றைக் கண்டான் 31

ஐயகோ என்றன் ஆசைக்
கினிய நன்மகளைத் தொட்டு
மையலாய்ப் பித்த மேறி
மதிகெடப் பொன்னாக் கிட்டேன்
வையமோ என்னைத் தூற்ற
வானமு தத்தைத் தள்ளி
பையவே நஞ்சை யுண்ட
பாவியாய் மாறி விட்டேன் 32

உயிரிலாப் பதுமை தன்னை
உற்றிடத் தானே யானும்
செயிரிலா வரமென் றெண்ணிச்
சிந்தனை யின்றிக் கேட்டேன்
வயிறது சானென் றாலும்
வளர்தரும் ஆசைப் பேய்க்கோ
மயலறு மலைபெற் றாலும்
மனநிறை வென்ப தில்லை 33

கனிகளும் பொன்னாய் மாறின்
　　காதலி தன்னை மெல்ல
இனிதென மறந்து தொட்டால்
　　இனியபொற் சிலைதான் காண்பேன்
கனியிளம் பேதை தன்னை
　　நான்தொடல் வாய்த்த தேனோ?
இனியெனக் கின்ப மில்லை
　　இங்கொரு நரகம் கொண்டேன் 34

மறந்துயான் என்னைத் தொட்டால்
　　மரணத்தை யடைவேன் திண்ணம்
சிறந்தபொன் னாசை போதும்
　　சீக்கிரம் தேவ தேவன்
அறந்தரு பாதம் நண்ணி
　　அருளிய வரத்தை மாற்றி
பிறந்ததன் பயனைப் பெற்றே
　　பிழைகளைத் தவிர்ப்பேன்! என்றான் 35

ஆசிரியரின் நூல்கள்

தமிழ்

1. கன்யாசுல்கம் (தெலுங்கு நாடக தமிழாக்கம்)
2. சிலம்பில் சிறு பிழை (சிலப்பதிகார விமர்சனம்)
3. கற்பனைப் பொய்கை (கவிதைத் தொகுப்பு)
4. தரிசனம் (வசன கவிதை)
5. காதா சப்த சதி (பிராகிருத மொழிப் பேரிலக்கியம்)
6. நாகானந்தம் (வடமொழி நாடக தமிழாக்கம்)
7. குந்தமாலா (,,)
8. வேமனு (வேமனு பொன்மொழிகள்)
9. ஆபுத்திர காவியம் (பெருங்காவியம்)
10. தெரு (சிறு காவியம்)
11. களாபூரணோதயம் (தெலுங்கு காவிய தமிழாக்கம்)
12. ஜைன தத்துவம் (தத்துவ நூல்)
13. வஜ்ஜாலக்கம் (பாகத அறநூல்)
14. ஔசித்ய விசார சர்ச்சா (விமரிசனம்)

தெலுங்கு

15. சைல கீதமு (குறிஞ்சிப்பாட்டின் தெலுங்காக்கம்)
16. முத்யால ஹாரமு (முத்தொள்ளாயிர தெலுங்காக்கம்)

மலையாளம்

17. முத்தொள்ளாயிரம்

கன்னடம்

18 முத்தொள்ளாயிரம்

KAAVIYA MANJARI (POEMS)

VISWASANTHI PATHIPPAGAM
RAJAPALAYAM

Rs. 20-00